நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | கார்த்திகை 09 | (24-11-93) | புதன்கிழமை | ஓசை 279

## யாழ். மாவட்ட பாடசாலைகள் பரீட்சை நேரசூசிகை மாற்றம்

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான ஆண்டிறுதித் தேர்வு பரீட்சை நேரசூசி மாற்றம் பற்றிய விபரங்களை உள்ளடக்கிய அறிவிப்பு ஒன்று பரீட்சைச் சபை செயலாளர் திரு துரை. தியாகராசாவால் விடுக்கப்பட்டுளளது. ஆண்டு 4 முதல் 10 வரையான நேரசூசி மாற்றம் பற்றிய அவ் அறிவிப்பில் ஆண்டு 6, 7 மாணவர்களுக்கான பரீட்சைகள் நவம்பர் 29, 30 டிசம்பர் 1, 2 ஆகிய திகதிகளில் நடைபெறும். நவம்பர் 30ஆம் திகதி பிற்பகல் ஆண்டு 7 மாணவர்களுக்கான வாழ்க்கைத்திறன் பாடம் மட்டும் நேரசூசிப் பிரகாரம் நடைபெறமாட்டாது. ஆண்டு 7 மாணவர்களுக்கான வாழ்க்கைத்திறன் பாடம் ஆண்டு 8 மாணவர்களுடன் சேர்த்து டிசம்பர் 20ஆம் திகதி திங்கட்கிழமை மு. ப. 11.30 முதல் (6ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி-இ.தொ.காங்கிரஸ் உறவில் பெரும் நெருக்கடி!

### சமரச முயற்சியும் தோல்வி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இலங்கை தோட்டத் தொழிலாளர்காங்கிரசிற்கும் இடையே கருத்து வேறுபாடுகள் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளதாகவும் இதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சரவையிலிருந்து விலகிக் கொள்ள இ. தொ. கா. தலைவர் தொண்டமான் முடிவு செய்துள்ளதாகவும் அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஐ.தே.கவிற்கும், இ. தொ. காவிற்கும் இடையே ஏற்பட்டுள்ள முறுகலைத் தணிப்பதற்கு நேற்று முன்தினம் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐ. தே. க செயலாளரும் அமைச்சருமான சிறிசேனகுரே மற்றும் இராஜாங்க அமைச்சர் ஜே. என் (6ஆம் பக்கம் பார்க்க)

## உலகில் தலைசிறந்த கெரிலாக்களாக சர்வதேசம் புலிகளை ஏற்றுள்ளது

### லங்கா காடியனில் இஸ்பெஸ்குசேன்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இன்றைய உலகின் தலை சிறந்த கெரிலாப்போர் வீரர்களாக சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளின் தாக்குதல் யுக்தியினால் யாழ்ப்பாணத்தை கைப்பற்ற எத்தனித்து இந்திய அமைதிப்படை தங்கள் படைவீரர்கள் பலரை இழக்க நேரிட்டதையும் நாம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

இவ்வாறு 'லங்கா கார்டியன்' இதழில் இஸ்பெஸ்குசேன் என்பவர் எழுதிய 'இரு வேங்கைகளின் கதை' என்ற தொடர் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அக் கட்டுரையில் மேலும் குறிப்பிடப்படுவதாவது;

வல்லரசுகள்கூட ஆப்கானிஸ்தானிலும், வியட்நாமிலும் கெரிலா யுத்தங்களுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் அவஸ்தைப் பட்டதையும் இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் சிக்கி மாண்டதையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

பிரதேசங்களை கைப்பற்றுவதனால் இத்தகைய போரை வெல்ல முடியாது இனப் பிரச்சினைகள் உள்ள உலகத் ( 6 ஆம் பக்கம் பார்க்க )

# பலாலி படைத் தளத்தில் அவசர பாதுகாப்பு மாநாடு!

## பூநகரி முகாம் பற்றி ஆராய்வர்

(கொழும்பு)

யாழ். - கிளிநொச்சி மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ள இராணுவ நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கென இணைப்பாளராக நியமிக்கப்பட்ட பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தன இன்று அல்லது நாளை பலாலி படைத்தளத்தில் அவசர பாதுகாப்பு மாநாடு ஒன்றை கூட்டவுள்ளதாக நேற்றைய 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இம் மாநாட்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள சகல இராணுவ, கடற்படை, விமானப்படை பொறுப்பதிகாரிகளும் தளபதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர் எனவும் இதில் பூநகரி இராணுவ முகாம் பற்றி ஆராயப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

## 'விடுதலைப் புலிகள்' ஏடு நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' இதழின் குரல் 42ஆவது (கார்த்திகை '93) ஏடு நாளை வெளிவருகின்றது.

''விஜேதுங்க அரசின் கொள்கை தோற்கடிக்கப்பட்டுவிட்டது'' என்ற தலைப்புச் செய்தியைத் தாங்கியுள்ள இவ் இதழில், புலிகளின் குரலாக - தவளை இராணுவ நடவடிக்கையும்- போராட்டத்தின் புதிய பரிமாணமும்'' என்ற கருத்துரை வழங்கப்பட்டுள்ளது.

'பூநகரி கூட்டுப்படைத் தளத்தின் மீது புலிகள் வீசச் செய்த புயல்' 'தவளை இராணுவ நடவடிக்கை' 'காந்தரூபன் அறிவுச்சோலை' என்ற கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன.

மேலும் 'விதைக்கப்பட்டது வீரமும்தான்' என்ற தலைப்பில்- வீரம் செறிந்ததும், இதயத்தைப் பிழியச் செய்கிற (6ஆம் பக்கம் பார்க்க)

## அரசசார்பற்ற நிறுவனங்களினால் பயங்கரவாத பிரச்சினை என்ற அரசின் நிலைப்பாடு நிராகரிப்பு!

(லண்டன்)

சிறிலங்கா ஜனாதிபதி விஜேதுங்கவும் ஏனைய அரசியல்வாதிகளும் இலங்கையில் உள்ளது இனப்பிரச்சினை அல்ல பயங்கரவாதப் பிரச்சினையே என கூறிவரும் கருத்தை லண்டனில் நடை... மாநாட்டில் கலந்துகொண்ட பிரபல செய்தியாளரான லூசியன் ராஜகருணநாயக்க இது குறித்து பி. பி. ஸிக்கு விளக்கமளித்தார்.

இலங்கையில் நடப்பது இனப்போர்தான் இதனைத் ... பாக அரசு மற்றும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சொந்த விருப்பத்தின்பேரில் குடியமர்த்தப்படுபவர்களின் இன்னல்களை எப்படி நீக்குவது என்பது குறித்து பேசினோம்.

# அவசர பாதுகாப்பு மாநாடு!

## பூநகரி முகாம் பற்றி ஆராய்வர்

(கொழும்பு)

**யாழ். - கிளிநொச்சி மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ள இராணுவ நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்கென இணைப்பாளராக நியமிக்கப்பட்ட பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தன இன்று அல்லது நாளை பலாலி படைத்தளத்தில் அவசர பாதுகாப்பு மாநாடு ஒன்றை கூட்டவுள்ளதாக நேற்றைய 'ஐலண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.**

**இம் மாநாட்டில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள சகல இராணுவ, கடற்படை, விமானப்படை பொறுப்பதிகாரிகளும் தளபதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர் எனவும் இதில் பூநகரி இராணுவ முகாம் பற்றி ஆராயப்படும் எனவும் தெரிவித்துள்ளது.**

இவ் இரு மாவட்டங்களிலுமுள்ள முகாம்களைப் பாதுகாப்பது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள இராணுவ நடவடிக்கைகள் குறித்து ஆராய்வது என்பன இம் மாநாட்டின் முக்கிய நோக்கம் என தெரிவிககப்படுகிறது.

இம் மாநாட்டின் பின்னர் பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தன இம் மாவட்டங்களிலுள்ள படை முகாம்களுக்குச்சென்று அங்குள்ள படையினருடன் ஆலோசனை நடாத்துவர் என்றும் ஆனையிறவு, பூநகரி ஆகிய முகாம்கள் தொடர்பாக இவர் கூடுதல் கவனம் செலுத்துவார் என்றும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'ஐலண்ட்' பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இவ் இரு மாவட்டங்களிலும் இராணுவ நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து நெறிப்படுத்தவும், கட்டளையிடவும் என நியமிக்கப்பட்ட பின்னர் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்க, சிறிலங்கா ஜனாதிபதி ஆகியோரை இவர் சந்தித்துப் பேசியதாகவும் நேற்றைய 'ஐலண்ட்' பத்திரிகை கூறுகிறது

(திகை '93) ஏடு நாளை வெளிவருகின்றது.

''விஜேதுங்க அரசின் கொள்கை தோற்கடிக்கப்பட்டுவிட்டது'' என்ற தலைப்புச் செய்தியைத் தாங்கியுள்ள இவ் இதழில், புலிகளின் குரலாக - தவளை இராணுவ நடவடிக்கையும்- போராட்ட களத்தின் மீது புலிகள் வீசச் செய்த புயல்' 'தவளை இராணுவ நடவடிககை' 'காந்தருபன் அறிவுச்சோலை' என்ற கட்டுரைகள் இதில் இடம் பெற்றுள்ளன.

மேலும் 'விதைக்கப்பட்டது வீரமும்தான்' என்ற தலைப்பில்- வீரம் செறிந்ததும், இதயத்தைப் பிழியச் செய்கிற

(6ஆம் பக்கம் பார்க்க)

அரசசார்பற்ற நிறுவனங்களினால்

## பயங்கரவாத பிரச்சினை என்ற அரசின் நிலைப்பாடு நிராகரிப்பு!

(லண்டன்)

சிறிலங்கா ஜனாதிபதி விஜேதுங்கவும் ஏனைய அரசியல்வாதிகளும் இலஙகையில் உள்ளது இனப்பிரச்சினை அல்ல பயங்கரவாதப் பிரச்சினையே என கூறிவரும் கருத்தை லண்டனில் நடைபெற்ற ''இலங்கையின் ஜனநாயகத்திற்கும் நீதிக்குமான குழு'' என்ற அரசசார்பற்ற அமைப்பின் மாநாடு நிராகரித்தது.

லண்டனில் கடந்த 20-ம் 21-ம் திகதிகளில் இலங்கை பிரச்சினை பற்றி இந் நிறுவனம் ஆராய்ந்தது. இம் மாநாட்டில் கலந்துகொண்ட பிரபல செய்தியாளரான லூசியன் ராஜகருணநாயக்க இது குறித்து பி. பி. ஸிக்கு விளக்கமளித்தார்.

இலங்கையில் நடப்பது இனப்போர்தான் இதனைத் தீர்க்க எல்லா தரப்புகளுடனும் கலந்தாலோசிக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

''இலங்கையிலுள்ள அடிமட்ட சமுதாயத்தில் உள்ளவர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தோம். குறிப்பாக அரசு மற்றும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சொந்த விருப்பத்தின்பேரில் குடியமர்த்தப்படுபவர்களின் இன்னல்களை எப்படி நீக்குவது என்பது குறித்து பேசினோம். இப் போரினால் பல கிராமங்களும் பாதிக்கப்பட்டுள்ளன என்றார்.

இம் மாநாட்டில் பிரிட்டனில் வாழும் இலங்கையரும், இலங்கையில் இயங்கும் பல அரச சார்பற்ற நிறுவனங்களும் பங்குபற்றின.

## அளவெட்டி மோதலில் இருபோராளிகள் வீரச்சாவு

அளவெட்டி பகுதியில் தடைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகள் மீது சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியது நேற்று முன்தினம் மாலை 4.00 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தை தொடர்ந்து

( 6 ஆம் பக்கம் பார்க்க )



கப்டன்
வெள்ளைத்தேவன்
(நியூட்டன்)



லெப். கதிரவன்
(கிரிமாமா)

### மாவீரர்கள்:

**தலைவனின் கட்டளையை**
**தலைமேற் கொண்டவர்கள்**
**தாயகம் மீட்டிட**
**தம்மையே தந்தவர்கள்.**

## வீரவணக்கம்

கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் காயமடைந்து சிகிச்சை பெற்ற விடுதலைப்புலிகள்



**வீரவேங்கை நிருபன்**

போராளி ஒருவர் நேற்றுமுன்தினம் வீரச்சாவை தழுவிக்கொண்டார் வீரவேங்கை நிருபன் (அருளானந்தம் அரவிந்தன் இராஜவீதி சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலி) என்ற போராளியே இவ்வாறு வீரச்சாவை தழுவிக் கொண்டவராவார் இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## தமிழீழ தேசத்தின் வரலாறு மாவீரர் குருதியால் எழுதப்பட்டது!

### யாழ். மாவட்ட அரசியல்துறையின் மாவீரர்வாரச் செய்தி

எமது தேசத்தின் வரலாறு ஒவ்வொருமாவீரரதும் குருதியாலும் எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாவீரர்களின் தியாகத்தால் அங்குலம் அங்குலமாக விடுவிக்கப்படும் எம்தேசம் உலக வரலாற்றிலே எங்கேயும் கண்டிராத தனித்தன்மையும் பெருமையையும் கொண்டிருக்கிறது தமது இளமை வாழ்வை எம்மண்ணுக்காகவே அர்ப்பணித்து இந்த மண்ணின் மூச்சுக்காற்றோடு கலந்த இவர்கள் நம் ஒவ்வொருவரதும் மனங்களிலும் வைத்து வணங்கப்பட வேண்டியவர்கள் சாதிமத பிரதேசவாதங்களுக்கு அப்பாற்பட்டு இந்த மண்ணின் விடிவு, மக்களின் விடுதலைஎன்ற விரிந்த இலட்சியத்தை மனதிலே வரித்துக் கொண்டு விடுதலை வேள்வியில் தம்மை ஆகுதியாக்கியவர்கள்.

இவ்வாறு மாவீரர் வாரத்தையொட்டி யாழ். மாவட்ட அரசியல் துறையினர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும்; எரிந்து போன ஒவ்வொரு எதிரிமுகாம்களும் குமுறிக் கொந்தளிக்கும் அலைகடல்களும் இவர்கள் ஒவ்வொருவரினதும்கதையினைக்கூறும். எமது மண் விடுவிக்கப்பட வேண்டும் என்பதற்காக எதிரியோடு நேருக்குநேர் களமாடி வீழ்ந்தவர்களும் வெடிமருந்தேற்றிய வாகனங்களில் எதிரியோடு மோதி

(6ஆம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சிப் பகுதி எங்கும் மாவீரர் வார எழுச்சிக் கோலம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாளையொட்டி தென்மராட்சிப் பகுதியெங்கும் எழுச்சிக் கோலம் பூண்டுள்ளது. தமிழீழ தாயக விடுதலைக்காக தம் இன்னுயிர்களைத் தியாகம்செய்த தமிழீழ மாவீரர்களை நினைவுகூருவதற்காகவும் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காகவும் அனுஷ்டிக்கப்பட்டுவரும் மாவீரர் வாரத்தில் தென்மராட்சிப் பகுதியெங்கும் உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள் தொழிலாளர்கள், அரச, தனியார் ஊழியர்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் என அனைத்துத் தரப்பு மக்களும் தியாகச்சாவடைந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளில் கலந்துகொண்டுவருகின்றனர்.

இம் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக தென்மராட்சிப் பகுதியெங்

(6ஆம் பக்கம் பார்க்க)


**மாவீரர்நாள் நவம்பர் 27**

எதிரியின் கொடூரத்திற்கு
எதிர்கால சந்ததி பலியாவதா?
இனிமேலும் அனுமதியோம்!
இணைவோம் வாரீர்.

**சுன்னாகம் வர்த்தக சங்கம்.**

(சி-7972)

## வரி விளம்பரம்

### தேவை

வெற்று எண்ணெய் பரல்களைவிற்பனைசெய்யவிரும்புவோர் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும். தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:- இல. 10,செம்பியன் லேன், கொக்குவில்

(சி-7981)

### தவறிவிட்டது

வெள்ளிக்கிழமை(19-11-93) சுப்பிரமணியம் ஞானஸ் காந்தவதனி என்பவருடைய பட்டமளிப்புச் சான்றிதழ் திருநெல்வேலிக்கும் நீர்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வணிக முகாமைத்துவ அலுவலகம் யாழ்பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கும்படி வேண்டுகிறேன். (6666)

### ஆரம்பம்

பளைக் கொத்தணிப் பாடசாலைகள் வழமை போல் இன்று புதன்கிழமை ஆரம்பமாகும் எனவே ஆசிரியர்களும், மாணவர்களும் தவறாது சமுகம் கொடுக்கும்படி. பளைக் கொத்தணி அதிபர் அறிவிக்கின்றார்.

### மாவீரர் வார வேலைகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தை முன்னிட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் இன்று கொக்குவில் தென் கிழக்கு கிருபாகரன் வீதி, குளப்பிட்டி வீதி என்பன துப்புரவு செய்யப்படும் எனவும், மரநடுகை இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது, அத்துடன் சண்டிலிப்பாய் வடக்கு வெள்ளவாய்க்கால், நவாலிகிழக்கு முருகமூர்த்தி கோவில் வீதி, சண்டிலிப்பாய் மேற்கு வெள்ளவாய்க்கால் வீதி என்பனவும் ஏழாலை மத்தி பெரியதம்பிரான்கோவிலடிப் பகுதியும், ஏழாலை கிழக்கில் மயானத்திற்கு செல்லும் வீதியும், சித்தன்கேணி விஜிதா வீதியும் துப்புரவு செய்யப்படவுள்ளதோடு வட்டுக்கோட்டை தெற்கில் மரநடுகையும் இடம்பெறவுள்ளது.

### வேலணை கோட்டத்தின் மாவீரர் எழுச்சி விழா

வேலணைக் கல்விக் கோட்

# உள்ளூராட்சி தேர்தல் ஒத்திவைக்கப்படும்?

(லண்டன்)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் மீண்டும் மோதல்கள் நடைபெறும் இவ் வேளையில் அடுத்த வருட முற்பகுதியில் இம் மாகாணத்தில் அரசு நடத்த திட்டமிட்டுள்ள உள்ளூராட்சி தேர்தல்கள் ஒத்திவைக்கப்படலாம் என பி.பி.ஸி குறிப்பிட்டது.

இது குறித்து மேலும் கருத்து தெரிவித்த பி.பி.ஸி கிழக்கில் வீதிகளில் காவல் புரியும் படையினர் புலிகளின் சுலபமான இலக்கிற்கு உள்ளாகின்றனர் திருமலையிலும், மட்டக்களப்பிலும் நேற்று முன்தினம் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன. கிழக்கில் சுமுகநிலை திரும்புவதாக அரசு கூறி உள்ளூராட்சி தேர்தலுக்கும்தயாராகிவரும் இவ் வேளையில் இத்தகைய மோதல்கள் சாதாரணமாகி வருகின்றன.

தேர்தல் நடத்த அரசு எடுத்த முடிவை இப் பகுதியின் சகல சமூக எம்.பி.களும் எதிர்த்துவருகின்றனர் தேர்தலை ஒத்திப்போடுமாறு அவர்கள் கூறுகின்றனர். தேர்தலை தாமதப்படுத்துவது குறித்து இணக்கம் ஏற்பட்டுள்ளதாக அரசியல் தரப்பில் கூறப்படுகிறது.

ஆனால் இது அரச தரப்பில் சங்கடமான விட்டுக் கொடுப்பாக ஆகிவிடும். தேர்தலை அரசு ஏற்கனவே இவ்வாண்டின் முற் பகுதியில் ஒத்திப் போட்டது பூநகரியில் பெற்ற இழப்பு குறித்து அரசு இன்னமும் கண்டனங்களுக்கு உள்ளாகி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது என பி.பி.ஸி குறிப்பிட்டது.

# ஆண்டிறுதி பெறுபேறுபடி ஆறாம் ஆண்டு அனுமதி

யாழ் மாவட்டபாடசாலைகளில் ஆறாம் ஆண்டிற்கு புதிதாக மாணவர்களை அனுமதிக்க யாழ் கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்படும் ஆண்டிறுதிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஆறாம் ஆண்டிற்கு மாணவர்களை அனுமதிக்கும் பாடசாலைகள் தாங்கள் சுயமாகவே போட்டிப் பரீட்சை ஒன்றை நடாத்தி அதன் மூலம் மாணவர்களை அனுமதித்து வந்தன.

எனவே தற்சமயம் பாடசாலைகளின் அனுமதி கோரி பல பாடசாலைகளிற்கு விண்ணப்பித்தும் பரீட்சைக் கட்டணம் செலுத்தி பரீட்சை எழுதியும் ஒரு பாடசாலைக்கே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதனால் பணமும் செலவாவதுடன் அலைச்சலையும் கொடுக்கின்றது ஆகையால் யாழ் கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற ஆண்டிறுதிப் பரீட்சைப்பெறுபேறுகளின் அடிப்படையில் ஆறாம் ஆண்டிற்கு மாணவர்களை அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது

எனவே மேற்படி பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அந்தந்தப் பகுதி கோட்டங்களிற்கான வெட்டுப்புள்ளியை அந்தந்த பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் நியமிக்கவுள்ளனர் இது கோட்டங்களிற்கு கோட்டம் வேறுபடும் என தெரிவிக்கப்பட்டது (பா)

# வாழ்க்கை திறன் கல்வி பயிற்சி வகுப்புகள்

1994 ஆம் ஆண்டு வாழ்க்கைத்திறன்கல்வியில் புதிதாக ஆரம்பித்திருக்கும் பயிற்சி வகுப்பிற்கு பங்குபற்றத்தவறிய அதிபர் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று புதன்கிழமை தொடக்கம் 29 ஆம்திகதி வரை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பு அதிபர்களுக்கு முதல் மூன்று நாட்களும் ஏனையவர்களுக்கு மற் நடைபெற மாட்டாது எனவும் தெரியவருகின்றது.

இது பற்றியதான கடிதங்கள்சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன மேற்படி தினங்களில் ஏற்கனவே வாழ்க்கைதிறன்கல்வியை ஆரம்பித்த பாடசாலைகளில் உள்ள பயிற்சி பெறாத அதிபர்களுக்கு நல்லூர் சாதனா சி. சி. தமிழ்க்கலவன்பாடசா

# வடகொரியாவிற்கு எதிராக இராணுவ நடவடிக்கை

வடகொரியா தொடர்ந்தும் தனது அணுஆய்வு மையங்களைப் பார்வையிடுவதற்கு சர்வதேச அணுசக்தி ஏஜென்சிகளுக்கு அனுமதி மறுக்குமாயின் அந்நாட்டின் மீது இராணுவத் தாக்குதல் நடத்தப்படலாம் என்று அமெரிக்கா எச்சரிக்கை செய்துள்ளது.

தென் கொரியாவின் ஜனாதிபதி நேற்று இது தொடர்பாக அமெரிக்காவுடன் ஆராய்ந்துள்ளார் என்பதும், வடகொரியாவின் அணுசக்தி உலைகளால் ஆசியாவின் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டிருப்பதாக அமெரிக்கா கூறியிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்

எனினும் தேக்க நிலைமையைப் போக்க அமெரிக்கா வேறு வழிகளைக் கையாள்வதற்குத் தயாராக இருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் வாறன் கிறிஸ்தோபர் அமெரிக்கத் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.


# மாவட்ட செயலர் 8 பேர் தி·மு·கவிலிருந்து நீக்கம்

## பொதுச்செயலர் அறிவிப்பு

(சென்னை)

கட்சிவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக திராவிட முன்னேற்றக் கழகம் தனது மாவட்டச் செயலாளர்களில் எட்டுப்பேரை நீக்கியிருப்பதாக அறிவித்துள்ளது. அக் கட்சியின் பொதுச் செயலாளரான பேராசிரியர் அன்பழகன் சென்னையில் வெளியிட்டுள்ள அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இப்பிரச்சினை தொடர்பான கலந்துரையாடலுக்காக கட்சியின் செயற்குழு சேலத்தில் நாளை மறுதினம் கூட இருக்கிறது. கட்சியிலிருந்து நீக்கப்பட்ட எட்டு மாவட்டச் செயலாளர்களும் வை. கோபால்சாமியின் ஆதரவாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
23.09.1973

தாயக மண்ணில்
24.11.1992

### வீரவேங்கை அருமைநாயகி
### (யேசுதாசன் ஜெயா அஞ்சலின் (இன்பம்)

எம் குடும்பத்தின் வசந்த தீபமே
உன் விடுதலை வேட்கையால்
சுதந்திர சிறகை அகல விரித்து
அண்ணனின் ஆணைக்கு செயல் வடிவம்கொடுத்து
வீர காவியம் படைத்து விட்டாய்

67, றெக்ளமேசன்,
புதிய கடற்கரை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
(6686)

தாய், தந்தை,
சகோதரர்கள்,
சகோதரி

# நினைவு கூருகின்றோம்... 1993.11.24

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

❋ **மூத்துப்பண்டா செல்வம்** (முறக்கொட்டாஞ்சேனை - மட்டு)

1989ஆம் ஆண்டு கரணவாய் மண்டான் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**அல்விஸ்** (சந்திரவி திருச்செல்வம் - மண்டான் கரணவாய் மேற்கு, கரவெட்டி - யாழ்)

1990ஆம் ஆண்டு வவுனியா மதவாச்சி, கோமரசன் கடவையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் நோயல்** (சண்முகராசா விக்கினேஸ்வரன்- திரியாய் - திருமலை)

**2-ம் லெப். அத்தார்** (இராசையா நவரட்ணம்- திரியாய் - திருமலை)

**அலெக்ஸ்** (சிவநாயகம் ரஜனிகாந் - கந்தசாமி கோவிலடி, உவர்மலை - திருமலை)

**நிமால்** (முருகையா காந்தரூபன் - திருமலை)

**றிச்சாட்** (பேரின்பராசா விஜயராசா - 2-ம்கட்டை, நிலாவெளி - திருமலை)

**பீலிக்ஸ்-பீரிஸ்** (— — கும்புறுப்பிட்டி - திருமலை)

தந்திரிமலைப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**மேஜர் பிறின்ஸ்** (பெனடிக்ற் அருள்ராஜன்- 5-ம் வட்டாரம்,விடத்தல்தீவு-மன்னார்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டு. ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

**கப்டன் மதன்-ஜிம்** (குமாரவேல் வினோத்குமார் நெடுந்தீவு மேற்கு - யாழ்)

**கப்டன் புத்துச்செல்வன்-நேரு** (ஜெயரட்ணம் பாலச்சந்திரன் - நவக்கிரி,புத்தூர் - யாழ்)

**கப்டன் மலரவன்-லியோ** (காசிலிங்கம் விஜிந்தன் இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி - யாழ்)

**கப்டன் பாசமலர்** (புஸ்பலதா கணபதிப்பிள்ளை- சிறிமுருகன்குடியேற்றம், தீருவில்-வல்வெட்டித்துறை)

**கப்டன் செல்வி-தனா** (மேரிஜசீந்தா செபஸ்தியாம்பிள்ளை புலோப்பளை பளை)

**லெப். முக்கண்ணன்-உமா** (வெள்ளையா சிறிகருணன் - சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலி யாழ்)

**லெப். மலரவன்-மன்சூர்** (நல்லதம்பி ஞானசேககரம் தோப்பு அச்சுவேலி யாழ்)

**லெப். லிங்கம் -ரமணலிங்கம்** (இராஜேந்திரம் பாஸ்கரன் - கம்பர்மலை - வல்வெட்டித்துறை)

**லெப். திருவருள்-ஜோசப்** (சின்னத்துரை கிருஷ்ணானந்தன் - வரணி, கொடிகாமம் - யாழ்)

**லெப். அமுதா-நிரோசா** (கெலன் மருசலின் புலோப்பளை - பளை)

**லெப். தேனருவி-ரஜீந்தா** (மீரா இராமச்சந்திரன் நுணாவில், சாவகச்சேரி - யாழ்)

**லெப். விஜித்தா** (மேரிஎமல்டா அந்தோனிப்பிள்ளை -செம்பியன்பற்றுவடக்கு,வடமராட்சிக்கிழக்கு)

**2-ம்லெப். விக்கினேஸ்வரன்-விக்கி** (வைரமுத்து சிவராசா தெல்லிப்பழை கிழக்கு - யாழ்)

**2-ம் லெப்- துரியோதனன்-யசி** (மகாலிங்கம் ரஜீஸ்வரன் - கோப்பாய்வடக்கு - யாழ்)

**2-ம் லெப். வல்லத்தரசு-மொறிஸ்** (சோமசுந்தரம் நல்லச்சந்திரன் - பருத்தித்துறை)

**2-ம் லெப். நல்லதம்பி-பகீர்** (அரியகுட்டி தேவ

வில் தென்கிழக்கு இருபாகரன் வீதி, குளப்பிட்டி வீதி என்பன துப்புரவு செய்யப்படும் எனவும், மரநடுகை இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது, அத்துடன் சண்டிலிப்பாய் வடக்கு வெள்ளவாய்க்கால், நவாலிகிழக்கு முருகமூர்த்தி கோவில் வீதி, சண்டிலிப்பாய் மேற்கு வெள்ளவாய்க்கால் வீதி என்பனவும் ஏழாலை மத்தி பெரியதம்பிரான்கோவிலடிப் பகுதியும், ஏழாலை கிழக்கில் மயானத்திற்கு செல்லும் வீதியும், சித்தன்கேணி விஜிதா வீதியும் துப்புரவு செய்யப்படவுள்ளதோடு வட்டுக்கோட்டை தெற்கில் மரநடுகையும் இடம்பெறவுள்ளது.

## வேலணை கோட்டத்தின் மாவீரர் எழுச்சி விழா

வேலணைக் கல்விக் கோட்டத்தின் ஏற்பாட்டில் மாவீரர் எழுச்சி விழா இன்று புதன்கிழமை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது இவ் விழாவிற்கு வேலணை கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ. சி. நல்லையா தலைமை வகிப்பார் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன், யாழ். மாவட்ட அரசியற் துறை பொறுப்பாளர் இளம்பரிதி, தீவகக் கோட்ட அரசியற் துறை பொறுப்பாளர் செம்மணன், உதவிக் கல்விப் பணிப்பாளர் நடேசபிள்ளை ஆகியோரின் சிறப்புரைகளுடன், கலைநிகழ்ச்சிகளும், பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளன.

பரீட்சை ஒன்றை நடாத்தி அதன் மூலம் மாணவர்களை அனுமதித்து வந்தன.

எனவே தற்சமயம் பாடசாலைகளின் அனுமதி கோரி பல பாடசாலைகளிற்கு விண்ணப்பித்தும் பரீட்சைக் கட்டணம் செலுத்தி பரீட்சை எழுதியும் ஒரு பாடசாலைக்கே

டையில் அந்தந்தப் பகுதி கோட்டங்களிற்கான வெட்டுப்புள்ளியை அந்தந்த பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் நியமிக்கவுள்ளனர் இது கோட்டங்களிற்கு கோட்டம் வேறுபடும் என தெரிவிக்கப்பட்டது (பா)

# வாழ்க்கை திறன் கல்வி பயிற்சி வகுப்புகள்

1994 ஆம் ஆண்டு வாழ்க்கைத்திறன் கல்வியில் புதிதாக ஆரம்பித்திருக்கும் பயிற்சி வகுப்பிற்கு பங்குபற்றத்தவறிய அதிபர் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு இன்று புதன்கிழமை தொடக்கம் 29 ஆம்திகதி வரை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பு அதிபர்களுக்கு முதல் மூன்று நாட்களும் ஏனையவர்களுக்கு மற்றைய நாட்களில் நடைபெறும் எனவும் 27 ஆம் திகதி நடைபெற மாட்டாது எனவும் தெரியவருகின்றது.

இது பற்றியதான கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன மேற்படி தினங்களில் ஏற்கனவே வாழ்க்கைதிறன்கல்வியை ஆரம்பித்த பாடசாலைகளில் உள்ள பயிற்சி பெறாத அதிபர்களுக்கு நல்லூர் சாதனா சி. சி. தமிழ்க்கலவன்பாடசாலையில் காலை 8. 30 மணி தொடக்கம் 4. 30 மணிவரை தினமும் பயிற்சி நடைபெறவுள்ளது. (பா)

## கலந்துரையாடல்

1992 ஏப்ரல் விசேட பரீட்சையில் தோற்றி பாதிக்கப்பட்ட மாணவர்கள், புதிய கல்வியாண்டிற்கானவிரிவுரைகளை தாமதிக்குமாறு யாழ் பல்கலைக்கழகத்தைக் கோருவது சம்பந்தமான கலந்துரையாடல் இன்று புதன் கிழமை மாலை 3 .30 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது இதில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## ஆணிவேர் வெளியீடு

ஏழாலைகொத்தணி விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பினரின் 'ஆணிவேர்' வெளியீட்டு விழா இன்று புதன் கிழமை பகல் 11. 00மணிக்கு ஏழாலை சிறீமுருகன் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.


உ

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுகவருஷம் கார்த்திகைத் திங்கள் 9-ம் நாள் (24-11-1993) புதன் கிழமை பகல் 10-11 மணிமுதல் 10-59 வரையுள்ள உத்தரட்டாதி நட்சத்திர தனுலக்கின சுபயோக சுபமுகூர்த்த வேளையில்

எமது புதல்வன்
திருநிறைச் செல்வன்
**பத்மநாதன் (நாதன்)**
அவர்களுக்கும்
மொடன் றேடியோ சேர்விஸ்
சாவகச்சேரி

எமது புதல்வி
திருநிறைச் செல்வி
**விஜயலெக்ஷ்மி (விஜி)**
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு யாழ். வண்ணை பன்றிகோட்டுபதி விஸ்வலிங்க பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் திருமாங்கல்யதாரண வைபவத்திற்கும் அதைச்சார்ந்த நாகவல்லி நிகழ்ச்சிகளிலும் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்துசிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி **திலகரத்தினம்**
**M. R S**
வீரபத்திரர் வீதி,
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

திருமதி **இருஷ்ணம்மாள் மாடசாமி**
401,கே கே எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)

(6676)



யில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**அல்விஸ்** (சந்திரவி திருச்செல்வம் - மண்டான் கரணவாய் மேற்கு, கரவெட்டி - யாழ்)

1990ஆம் ஆண்டு வவுனியா மதவாச்சி, கோமரசன் கடவையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன் நோயல்** (சண்முகராசா விக்கினேஸ்வரன்- திரியாய் - திருமலை)

**2-ம் லெப். அத்தார்** (இராசையா நவரட்ணம்- திரியாய் - திருமலை)

**அலெக்ஸ்** (சிவநாயகம் ரஜனிகாந் - கந்தசாமி கோவிலடி, உவர்மலை - திருமலை)

**நிமால்** (முருகையா காந்தரூபன் - திருமலை)

**றிச்சாட்** (பேரின்பராசா விஜயராசா - 2-ம்கட்டை, நிலாவெளி - திருமலை)

**பீலிக்ஸ்-பீரிஸ்** (— — கும்புறுப்பிட்டி - திருமலை)

தந்திரிமலைப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

**மேஜர் பிறின்ஸ்** (பெனடிக்ற் அருள்ராஜன்- 5-ம் வட்டாரம்,விடத்தல்தீவு-மன்னார்)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டு. ஐயங்கேணியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1992ஆம் ஆண்டு யாழ் - பலாலி கிழக்குப் பகுதி தொண்டமானாறு, இடைக்காடு பகுதியில் அமைக்கப்பட்டிருந்த சிறிலங்கா இராணுவக் காவலரண்கள் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

**லெப். ஜெயசுபா** (தேவநாயகம் ஜெயசீலன்-மஞ்சத்தொடுவாய், கொலனி - மட்டு)

**லெப். அருந்ததி** (சாந்தகி சிவப்பிரகாசம் - பன்குடாவெளி, செங்கலடி - மட்டு)

**லெப். கௌசி** (பவானி கணபதிப்பிள்ளை - கும்புறுமூலை - மட்டு)

**பத்மா** (வசந்தி விநாயகம் - கிரான் - மட்டு)

**லெப். நாவேந்தன்-டேவிட்** (ஞானப்பிரகாசம் ஜெயபாலன் - பாலையூற்று - திருமலை)

**2-ம் லெப். மாயவன்** (தர்மலிங்கம் சிறிதரன்- 5-ம் வட்டாரம், திரியாய் - திருமலை)

**லெப்.இளநிலா - பாத்திமா** (சிவா நடராசா - தண்ணீரூற்று - முள்ளியவளை - மணலாறு)

**லெப். இசையமுதன்-சிந்து** (சபாரத்தினம் விஜயகுமார் - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு)

**2-ம் லெப். வேணி** (கௌரியம்மா விவேகானந்தம்-ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு)

**கவியரசி-வனிதா** (கமலலோசினி பாலகிருஷ்ணன் - விசுவமடு திருமலை)

**லெப். லீலா** (கலாஜினி கந்தையா - தம்பிராய், பூநகரி - மன்னார்)

**லெப். அழகையா-கெனடி** (தேவராஜ் ஜோன்சன் - ஆட்காட்டிவெளி, அடம்பன் - மன்னார்)

**லெப். கனகேஸ்** (இரத்தினம் விஸ்வகுமார் - சிவபுரம், கிரான்சி -(மன்னார்)

**பட்டு** (சந்திரமதி குமாரசாமி - வேராவில், பூநகரி - மன்னார்)

**மேனன்** (நவரட்ணம் இம்மானுவேல் - சிலாவத்துறை - மன்னார்)

**கீர்த்தி** (மேரிதிரேசா சந்தான் - சிறுகண்டல், முருங்கன் - மன்னார்)

**2-ம்லெப். அரசன்** (ராஜ்முத்து ஜீவச்சந்திரன்- செட்டிக்குளம் - வவுனியா)

**லெப். செல்வி-டில்லி** (விக்னேஸ்வரி மாரிமுத்து - விநாயகபுரம், துணுக்காய், நெடுந்தீவு)

**அரவிந்தா - கௌசலா** (சுகந்திஅழகுதுரை-பாண்டியன்குளம் - வவுனியா)

**தில்லைச் செல்வன் - ரகுபதி** ( சின்னப்பொடி கவிரஞ்சன்-6-ம் யூனிற் இராமநாதபுரம் - கிளிநொச்சி)

**கௌதமி** (சஜிக்கா அம்பலம் - கரடிபோக்கு - கிளிநொச்சி)

**மேஜர் டொக்சன்-தமிழரசன்** (கந்தசாமிஜெயக்குமார் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு - யாழ்)

**கப்டன் வீமன்** (நாகையா சுப்பிரமணியம்-சாவகச்சேரி வடக்கு -யாழ்)

**லெப். முக்கண்ணன்-உமா** (வெள்ளையா சிறிகருணன் - சிறுப்பிட்டி தெற்கு நீர்வேலி யாழ்)

**லெப். மலரவன்-மன்சூர்** (நல்லதம்பி ஞானசேகரம் தோப்பு அச்சுவேலி யாழ்)

**லெப். லிங்கம் -ரமணலிங்கம்** (இராஜேந்திரம் பாஸ்கரன் - கம்பர்மலை - வல்வெட்டித்துறை)

**லெப். திருவருள்-ஜோசப்** (சின்னத்துரை கிருஷ்ணானந்தன் - வரணி, கொடிகாமம் - யாழ்)

**லெப். அமுதா-நிரோசா** (கெலன் மருசலின் புலோப்பளை - பளை)

**லெப். தேனருவி-ரஜீந்தா** (மீரா இராமச்சந்திரன் நுணாவில், சாவகச்சேரி - யாழ்)

**லெப். விஜித்தா** (மேரிஎமல்டா அந்தோனிப்பிள்ளை -செம்பியன்பற்றுவடக்கு,வடமராட்சிக்கிழக்கு)

**2-ம்லெப். விக்கினேஸ்வரன்-விக்கி** (வைரமுத்து சிவராசா தெல்லிப்பழை கிழக்கு - யாழ்)

**2-ம் லெப்- துரியோதனன்-யசி** ( மகாலிங்கம் ரஜீஸ்வரன் - கோப்பாய்வடக்கு - யாழ்)

**2-ம் லெப். வல்லத்தரசு-மொறிஸ்** (சோமசுந்தரம் நல்லச்சந்திரன் - பருத்தித்துறை)

**2-ம் லெப். நல்லதம்பி-பகீர்** (அரியகுட்டி தேவதாசன் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு - யாழ்)

**நாகையன்-அன்று** (தேவராஜா ஜேசுநேசன்- பிறஸ்றோட், சுண்டிக்குளி - யாழ்)

**இசைக்கோன்** (சிவசாமி கண்ணன்-அல்வாய் மேற்கு பருத்தித்துறை)

**கதிரவன்** (விஜயலக்குணம் கற்கண்டு - விழிசுட்டி, சங்கானை - யாழ்)

**2-ம் லெப். கௌரி** (அமுதினி வீரகத்தி - சர்வோதயவீதி, புத்தூர் - யாழ்)

**2-ம் லெப். ஜீவராணி** (நந்தினி பத்மநாதன்-மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி யாழ்)

**2-ம் லெப். காயத்திரி** (தவச்செல்வி கோவிந்தன் தொண்டமனாறு-யாழ்)

**2-ம் லெப். சிவம்-சிவனேஸ்** (புஸ்பமலர் யாக்கப் - அல்வாய் மேற்கு பருத்தித்துறை)

**வீரமணி** (மகாலிங்கம் சுதர்சன்- மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி - யாழ்)

**பாக்கியம்** (வனசா அரசரத்தினம்-வேலணைகிழக்கு)

**சந்திரா** (கவிதா குணரத்தினசிங்கம் -அம்பன், குடத்தனை- வடமராட்சி கிழக்கு)

**கனிஸ்ரா** (குணசுந்தரி குணரத்தினம்- பண்டிதர் குடியிருப்பு, கெற்பலி மிருசுவில் - யாழ்)

**சக்தி** (சுதர்சினி சுந்தரலிங்கம் - கரணவாய் மேற்கு, கரவெட்டி - யாழ்)

**குலேந்தினி** (சரோசினி முத்துராசா - புத்தூர் கிழக்கு - யாழ்)

**நர்மதா - நெல்சா** (பராசக்தி செல்லத்துரை- ஏழாலை மத்தி-யாழ்)

**நிதி** (உதயராணி தர்மலிங்கம் - உரும்பராய் தெற்கு யாழ்)

**ஆவர்த்தனா** (ஜெனிற்றாஜேசுதாசன்-பாங்சால்வீதி யாழ்ப்பாணம்)

**குறமகள்** (இந்துமதி முத்துக்குமார்- மறவன்புலோ தனங்கிளப்பு - கைதடி - யாழ்)

**அருமைநாயகி** (ஜெயா அஞ்சலின் ஜேசுதாசன் - பீச்றோட்,குருநகர்-யாழ்)

மட்டு - மாவட்டத்தில் எதிர்பாரதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த-

**தனபாலசிங்கம்** (சோமசுந்தரம் சிவராசா - கரவெட்டி - மட்டு)

## ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

✻ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்.

(சி-7982)

## இதய அஞ்சலி

அமரர்
**திரு. மு. கணபதிப்பிள்ளை ஜே.பி.**
அவர்கள்

மறவன்புலவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியரும், சமூக சேவையாளரும் அறவழிப் போராட்டக் குழுவின் நிறுவனர் திரு க. சச்சிதானந்தன் அவர்களின் தந்தையாருமாகிய,

அமரர் திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்களின் மறைவு குறித்து எமது இதய அஞ்சலிகளை அவரின் குடும்பத்தார் - உறவினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம்.

அறவழிப்போராட்டக்குழு
(NVDAG)

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.
(6682)

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



**2-ம் லெப்டினன்ட் கௌரி**
**(வீரகத்தி அமுதினி)**

வீரநில விளைவாக: **1973-05-03**
வீரநில வித்தாக: **1992-11-24**

மாவீரர்கள் அனைவரையும் துதிக்கின்றோம்
இம் மாவீர நாளிதில்

உம் உதிரச் செவ்வைகள்
சிலம்புப் பரல்களாய்
அடர்ந்து படர்ந்து
கிடக்கின்ற இம் மண் மாதாவில்
எம் பணி தொடரும்....

இன்று எமதில்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சக போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி!

முரளி வீதி,
ஆவரங்கால். (6671)
- கௌரி குடும்பத்தினர்

## நினைவழியா நினைவுநாள்

## ஓராம் ஆண்டு

# பிரேமதாசா கொலை பற்றி 6000 பக்கத்தில் அறிக்கை

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலை தொடர்பாக ஆறாயிரம் பக்க அறிக்கை ஒன்றை சிறிலங்கா குற்றப்புலன் விசாரணைத் திணைக்களம் தயாரித்துள்ளது.

இவ்வருடம் மேதின ஊர்வலத்தின்போது தற்கொலைப்படையாளியினால் இவர் கொல்லப்பட்ட சம்பவம் பற்றியும் அதனுடன் தொடர்புடைய விடயங்களும் உள்ளடங்கியதாக இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் இது விரைவில் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## முதல் ஆண்டு நினைவுச்சுடர்!



பன்குளத்தில்
முத்தாய்
28-10-1972

பலாலிக்களத்தில்
வித்தாய்
24-11-1992

**வீரவேங்கை கவியரசி (வனிதா)**

**(பாலகிருஷ்ணன் கமலசுலோசினி)**
4-ம் கண்டம், பன்குளம் - திருகோணமலை

பசிய பூங்கொடி! பாயும் வேங்கைப்
படைதனில் நீயிணைந்தாய் - மனக்
கசிவே இல்லா காடை வெறியரைக்
களத்தினில் நீ முடித்தாய்!
இசைவுடனே தமிழ் ஈழ தாகத்தை-
இதயத்தில் கொண்டெழுந்தாய்! - விழி
கசிந்து உருகிட களத்தினில் சாய்ந்தாய்
கமல சுலோசினியே!

பொன்மகளே நீ பூமியில் வித்தாய்ப்
புதைந்தொரு ஆண்டாச்சு - நாங்கள்
உன் திருவுருவை உளத்தினிற் பதித்தோம்
ஒரு கணம் மறந்தறியோம்!
சின்னவள் நீயும் ''கவியரசி'' எனும்
சிறந்த நற்பெயர் கொண்டாய் - நீ
என்றென்றும் எங்கள் நினைவொடு கலந்தே
இருப்பாய் திருமகளே!

இதேதினத்தில் எமது மகளுடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவுகூருகின்றோம்.

தற்போதைய முகவரி
'நாதன்' குடியேற்றம்,
விசுவமடு.
(சி-7983)

அன்பு அப்பா, அம்மா,
சகோதரர், மாமாமார்
மற்றும் உறவினர், நண்பர்கள்.

# புலிகளிடமிருந்துதான் அரசு அதிகாரம் பெறவேண்டியுள்ளது

--பசீர் சேகு தாவூத்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திற்குத் தான் சிறிலங்கா அரசாங்கம் அதிகாரப் பரவலாக்கலில் ஏதாவது கொடுக்க வேண்டும். வடக்கைப் பொறுத்த வரை விடுதலைப் புலிகள் தான் தங்களிடம் இருக்கும் அதிகாரங்கள் சிலவற்றை அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். இதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் சேகு தாவூத் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது கடந்த 10 வருட காலத்தில் இனப்பிரச்சினை எவ்வாறு ஒரு நேரடி யுத்தமாக உருவெடுத்திருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

போரின் இந்த வளர்ச்சியை கட்டுப்படுத்தக்கூடிய வல்லமை எமக்கிருக்கிறதா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்

ஒரு மாவட்டத்திலே ஆயிரம் பாதுகாப்புப் படையினர் நிலைகொண்டிருந்த காலத்தில் அவர்களை எதிர்கொள்ள முடியாமல் கெரில்லா யுத்தம் நடத்தியவர்கள் இன்று இரண்டாயிரம் பாதுகாப்புப் படையினர் ஒன்றாகக் கூடியிருந்த முகாமையே நேரடி யுத்தத்தில் தாக்கக்கூடிய வல்லமையைப் பெற்றிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் பர்மாவின் காடுகளுக்குள்ளே தொலைத்தொடர்பு சாதனங்களைப் பொருத்தி செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கட்டுப்படுத்தக்கூடிய சக்தி எமக்கு இருக்கிறதா? என்று கேள்வி எழுப்பினார்.

## நீங்காத நினைவில் ஓராண்டு

**கப்டன் மலரவன்**
**(காசிலிங்கம் விஜிந்தன்)**

பள்ளிப் பருவத்தில் நெஞ்சத்தே
துளளும் இளமை நினைவுகளை
தள்ளி எறிந்து விட்டு
துள்ளி எழுந்து தமிழர்
துயர் போக்க களம்
ஆடச் சென்ற மலரவனே
சாதனைகள் பல தொடரும்
வேளைதனில் இடையினிலே சென்றாலும்
தொடரும் இங்கே உன் பாதை

நல்லூர்
கேதாரநாதன்
குடும்பத்தினர்
(6685)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
08- 01. 1973

வீரச்சாவு:
24. 11. 1992

**வீரவேங்கை ஆவர்த்தனா**
**(யேசுதாசன் ஜெனிட்டா அஜித்தா)**

அன்போடிணைந்த ஜெனிட்டா நீ
கண்போன்ற எங்களை கண்ணீரில் மிதக்கவிட்டு
இன்று மாவீரர் வரிசையில்
மங்கா இடம் பெற்ற பெருமை
ஆண்டொன்றானாலும் ஆறாது எம்துயர்

### கோமாரி கப்பலில் பழுது ஏற்பட்டுள்ளது

(நமது நிருபர்)

தற்சமயம்பருத்தித்துறையில் மண்ணெண்ணெய் மற்றும் தேங்காய்எண்ணெய் ஆகியவற்றினை இறக்கிக்கொண்டு இருக்கும் ''கோமாரி'' கப்பலின் சில பகுதிகள் பழுதடைந்து விட்டதாக தெரிய வருகின்றது.

எனவே இக்கப்பல் பொருள்களை இறக்கி முடித்ததும் நிர்மாணப் பணிக்கென டொக்கியாட்டிற்கு செல்ல இருப்பதாக தெரிய வருகின்றது.

மேலும் இக்கப்பலின் நிர்மாணப்பணிமுடிவடைந்ததும் மீண்டும் தனது சேவையை தொடருமா என்பது பற்றி தெரியவரவில்லை. (பா) (சி)

### றுகுணுவில் உரமும், விதைகிழங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிற்கென சுமார் 800 மெற்றிக் தொன் உரம் மற்றும் 140 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு என்பன ''றுகுணு'' கப்பலில் ஏற்றப்பட்டுக்

மாவீரர்கள் அனைவரையும் துதிக்கின்றோம்
இம் மாவீர நாளிதில்

உம் உதிரச் செவ்வைகள்
சிலம்புப் பரல்களாய்
அடர்ந்து படர்ந்து
கிடக்கின்ற இம் மண் மாதாவில்
எம் பணி தொடரும்....

இன்று எமதில்லத்தில் நடைபெறும் அஞ்சலி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சக போராளிகள், நண்பர்கள், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி!

முரளி வீதி,
ஆவரங்கால். (6671)
- கௌரி குடும்பத்தினர்

---

கசிந்து உருகிட களத்தினில் சாய்ந்தாய்
கமல சுலோசினியே!

பொன்மகளே நீ பூமியில் வித்தாய்ப்
புதைந்தொரு ஆண்டாச்சு - நாங்கள்
உன் திருவுருவை உளத்தினிற் பதித்தோம்
ஒரு கணம் மறந்தறியோம்!
சின்னவள் நீயும் ''கவியரசி'' எனும்
சிறந்த நற்பெயர் கொண்டாய் - நீ
என்றென்றும் எங்கள் நினைவொடு கலந்தே
இருப்பாய் திருமகளே!

இதேதினத்தில் எமது மகளுடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவுகூருகின்றோம்,

தற்போதைய முகவரி
'நாதன்' குடியேற்றம்,
விசுவமடு.
(சி-7983)

அன்பு அப்பா, அம்மா,
சகோதரர், மாமாமார்
மற்றும் உறவினர், நண்பர்கள்.

---



08- 01. 1973

வீரச்சாவு:
24. 11. 1992

## வீரவேங்கை ஆவர்த்தனா
### (யேசுதாசன் ஜெனிட்டா அஜித்தா)

அன்போடிணைந்த ஜெனிட்டா நீ
கண்போன்ற எங்களை கண்ணீரில் மிதக்கவிட்டு
இன்று மாவீரர் வரிசையில்
மங்கா இடம் பெற்ற பெருமை
ஆண்டொன்றானாலும் ஆறாது எம்துயர்

186, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.
(6677)

இவரின் பிரிவால் வாடும்
குடும்பத்தினர், உறவினர்.

---

டைந்து விட்டதாக தெரியவருகின்றது.

எனவே இக்கப்பல் பொருள்களை இறக்கி முடித்ததும் நிர்மாணப் பணிக்கென டொக்கியாட்டிற்கு செல்ல இருப்பதாக தெரிய வருகின்றது.

மேலும் இக்கப்பலின் நிர்மாணப்பணிமுடிவடைந்ததும் மீண்டும் தனது சேவையை தொடருமா என்பது பற்றி தெரியவரவில்லை. (பா) (சி)

## றுகுணுவில் உரமும், விதைகிழங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிற்கென சுமார் 800 மெற்றிக் தொன் உரம் மற்றும் 140 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு என்பன ''றுகுணு'' கப்பலில் ஏற்றப்பட்டுக் கொண்டிருப்பதாக யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்றி முடிந்ததும் அங்கிருந்து புறப்படும் இக் கப்பல் எதிர்வரும் 25ஆம் திகதி அல்லது 26ஆம் திகதி பருத்தித்துறையை வந்து சேருமென எதிர்பார்க்கப் படுகின்றது.

(சி), (பா)

---

## நினைவழியா நினைவுநாள்

## ஓராம் ஆண்டு



தாயின் மடியில் முத்தாக:
—
தாயக மண்ணில் வித்தாக:
24.11.1992

## கப்டன் மதன் (ஜிம்)
## குமாரவேலு வினோத்குமார்
### (மயூரன்)

நெடுந்தீவு மேற்கு

மதனே! எனதருமை மருமகனே!
எங்கே நீ சென்றுவிட்டாய்.

வீட்டைவிட்டு வெளியேறி விடுகாலி ஆனாயா?
கைகட்டி கால் துடைத்து வெள்ளிப் பணம் தேட
வெளிநாடு சென்றாயா?
கல்யாண சந்தையிலே புதுக் கார் விலைக்குப்
போனாயா?

இல்லையடா;
ஈழத் தமிழினத்தின் இன்னல் தனைப் போக்க
வாளெடுத்துப் போர் தொடுத்து
மானஸ்த்தன் ஆகிநின்றாய், மாவீரன் ஆகிவிட்டாய்
ஆனாலும் நாமிங்கே அழவில்லை- ஏனென்றால்
நெஞ்சில் விடுதலைக் கனல் கொண்டு நெருப்புக்
கோழங்களாய்
உன் போல் பல்லாயிரம் மாவீரர் இம்மண்ணில்
புதைந்துள்ளார்
ஆனதினால் இப்பூமி இனியும் பொறுக்காது
கட்டாயம் பூகம்பம்தான் வெடிக்கும் - அதில்
புது ஈழம் பிறக்குமென்று பூரித்துப் போயுள்ளோம்.

இல. 16, 3-ம் ஒழுங்கை,
கண்டி வீதி,
அரியாலை. (6681)

கா.மு.சின்னத்துரை மாமா,
பிள்ளைகள், மருமக்கள்,
குடும்பத்தினர்.

---

## 1-ம்ஆண்டு நினைவஞ்சலி



## லெப்டினன்ட அமுதா/நிரோசா
### (மருசலீன் கெலன்)

மலர்வு:
25. 09. 1973

வீரச்சாவு:
24. 11. 1992

தமிழ்த் தாய் பெற்றெடுத்த தவப்புதல்வி - இவள்
தலைவர்பாதையில்வீரத்தோடுதன்னைஇணைத்தவள்
களம் பல கண்டு காதலித்த மண்ணை காத்தவள்
மண்ணையும் மக்களையும் நேசித்தவள்
மண்ணில் விதையாகி, விருட்சமாகி இசைக்கின்றாள்
அமுதகானம்
அடிமை விலங்குடைத்த பெண்புலி இவள்
பயணம் தொடர்வோம் விடிவு வெகு தூரமில்லை.

இன்று (24.11 93) அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உற்றார், உறவினர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவரின் நினைவால் துயருறும்
அன்பு அம்மா, அண்ணா, அன்ரிமார்,
மாமன்மார், மச்சான்மார்,
மாமிமார், மச்சாள்மார்,
உற்றார், உறவினர்.

புலோப்பளை கிழக்கு,
பளை.

(6680)

---

## 31-ம்நாள் நினைவஞ்சலி



## திரு. பறுநாந்துப்பிள்ளை
## மரியநாயகம் (ரத்தினம்)

பிறப்பு
09-12-1939

இறப்பு
25-10.1993

அப்பா!
கண்களின் ஒளியினில்தான் - நாம்
கல்வி பயின்றோம் - உம்
கரங்களைப் பற்றியே - கலங்காது வாழ்ந்தோம்
காலனவன் உம்உயிரை பறித்திட்டபோது
காரிருளில் விடப்பட்டு
கதிகலங்கி நிற்கின்றோம்
காலங்கள் உருண்டோடி - காவியங்கள்
மாறினாலும் எந்நாளும் உமை மறவோம்.

இவரது ஆத்மசாந்திக்காக 24-11-93 இன்று பி ப 3. 30 மணிக்கு புனித கொலை விலக்கி மாதா ஆலயத்தில் (அஞ்சணந்தாழ்வு) இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

நன்றி

இவரது பிரிவால் துயருறும்
மனைவி, தாய், பிள்ளைகள், சகோதரர்கள்,
சகோதரி, உற்றார், உறவினர், நண்பர்கள்

இல. 111, ஒட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (6684)

---

## படகில் மாவீரர் படங்கள்

மாவீரர் வாரத்தையொட்டி, கடலிலே காவியமான மாவீரர்களின்உருவப் படங்கள், சுன்னாகம் கந்தரோடைக் குளத்தில் அலங்கரிக்கப்பட்டபடகொன்றில் வைக்கப்பட்டு உலா வரப்படுகிறது. இரவில் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இப்படகு பவனி வருதல் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கிறது (09) 11)

## இலத்திரனியல் கல்வி

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்வித் திட்டத்தின் கீழ் இலத்திரனியல் தொடர்பான ஓர் அடிப்படை கல்வித் திட்டமொன்று எதிர் வரும் டிசம்பர் மாதத்தில் 15 நாட்களுக்குத் தினமும்காலை 9 மணியில் இருந்து மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளது

இப்பயிற்சியைப் பெறவிரும்புபவர்கள் தமதுவிண்ணப்பங்களை யாழ். கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவிற்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இதற்கான அடிப்படைத் தகைமையாக 11ஆம் ஆண்டு படித்திருக்கவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. மேலும் விஞ்ஞானம் போதிக்கும் ஆசிரியர்களுக்கு இது பயனுள்ள ஒன்று எனவும் தெரிவிக்கப் பட்டது. (பா)

நல்லூர் இளை நூலகம்
யாழ்ப்பாணம்.

## ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



தாயின் மடியில்;
05.11.1972

தமிழீழ மண்ணில்:
24.11-1992

**லெப்டினனட் விஜித்தா**
(அந்தோனிப்பிள்ளை மேரி மெல்டா)

செம்பியன்பற்று
(குமரிநாடன்)
குடியிருப்பு முகாம்

உன்பிரிவால் ஏங்கும்
குடும்பத்தினர்
(6665)

## முதலாம் ஆண்டு நினைவாக



தென்மராட்சியின் வீறு கொண்ட மாவீரன்

**கப்டன் வீமன்**
(நாகையா சுப்பிரமணியம்,ராசன்,மணியம்)

பிறப்பு: மாவீரராக:

## 31-ம் நாள் நினைவஞ்சலி
(24-11-93)

எமது சக மாணவியும், விளையாட்டுத்துறைத் தலைவியுமான,
செல்வி அ. அஜந்தாவின் தந்தை

**திரு. செ. அப்புத்துரை அவர்களின்**

ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுவதுடன், எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், கவலையையும் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

யாழ் இந்துமகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

அதிபர்,
ஆசிரியைகள், மாணவிகள்
(6678)

## 1-ம் ஆண்டு நினைவில்...



**லெப். கௌசிகா**
(கணபதிப்பிள்ளை பவானி)
கும்புறுமூலை — கிரான், மட்டக்களப்பு.

பிறப்பு:
12-11-1972

வீரச்சாவு:
24-11-1992

பலாலியில் உனை பகை
வீழ்த்தியதால்
கும்புறுமூலை ஒன்றும் கண்ணீர்
வடிக்காது — எழும்;
படையணியாகி பகையினை
முடிக்க புறப்பட்டுப் போகும்
எதிரிகள் பாசறை நடுங்கும்!
பெண்கள் படையொன்று
ஊரிலே உலவும்.

- போராளிகள்

(6640)

## ஆண்டொன்று போயினதோ!



# இராணுவ இழப்பை கூறினால் உயிர் கொடுத்து விடுவீர்களா?

### எதிர்க்கட்சிகள் மீது அமைச்சர் பாய்ச்சல்

(கொழும்பு)
யுத்தத்தில் பலியான விடுதலைப் புலிகளின் தொகையை க்கூறுகின்றீர்கள். கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கையை கூறுங்கள் என சிலர் இங்கு கேட்கிறார்கள். இவ்வாறு தொகை கூறப்பட்டால் அவர்களுக்கு உயிர் கொடுக்கப்போகின்றீர்களா?

மேற்கண்டவாறு உயர் கல்வி அமைச்சர் லொக்கு பண்டார பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பார்த்து கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணத்தில் எமது இராணுவ வீரர்கள் எதிரிகளிடம் சிக்கிக்கொண்டால் அது, ஐக்கிய தேசியக் கட்சியின்இராணுவம் என்று கூறுவதா? அவர்கள் இந்நாட்டைக் காக்கச்சென்ற உத்தம புருஷர்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது எனவும் அவர் அங்கு தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தை பிடிப்பதானால் 20,000 துருப்புக்களை இழப்போம்

### டென்சில் கூறினாராம்

(கொழும்பு)
முன்னாள் இராணுவத் தளபதி லெப்ஜெனரல் டென்சில்கொப்பேகடுவ கொல்லப்படுவதற்கு முன் பாகநான் அவரை திருமண வைபவம் ஒன்றில் சந்தித்தேன்.

யாழ்ப்பாணத்தை நாம் கைப்பற்ற வேண்டுமாயின் இருபது ஆயிரம் பேரை நாம் இழக்க வேண்டிவரும் என அவர் தெரிவித்தார்.

இவ்வாறு சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

## வீதிகள் சிரமதானம்

(கொழும்புத்துறை)
மாவீரர் வார நிகழ்வுகளையொட்டி வட இலங்கைச் சர்வோதயம் தொல்புரம் கிளையினரால் இப்பகுதியில் உள்ள வீதிகள், ஒழுங்கைகள் யாவும் சிரமதானப் பணிமூலம் செப்பனிடப்பட்டு வருகிறது.

சர்வோதயத்தின் சகல சேவையாளர்களும் இப்பணியில் ஈடுபட்டுச் செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (24)

(கொழும்புத்துறை)
மாவீரர் வாரத்தையொட்டிகொழும்புத்துறை மேற்கு வதிரி பீடமன்றுளாடும் அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயப் பூந்தோட்டம் ஆலய பரிபாலன சபையினரால் கடந்த ஞாயிறு தொடக்கம் தொடர்ந்து சிரமதானப் பணி மூலம் செப்பனிடவுள்ளதாக பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (24)

## சுன்னாகத்தில் மாவீரர் வரலாறு பந்தல்

(கொழும்புத்துறை)
சுன்னாகத்தில் மாவீரர் தினத்தை முன்னிட்டு மிகப் பிரமாண்டமான பந்தல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இப்பந்தலில் போராட்ட கால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் படங்களும், மாவீரர் படங்களும் தொங்க விடப்பட்டுள்ளன. (24)

## நல்லின தென்னம்பிள்ளை முல்லையில் விநியோகம்

நல்லஇனதென்னம்பிள்ளைகளை பொதுமக்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்யும் திட்டமொன்றை முல்லை மாவட்டத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விவசாயப் பகுதியானது மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை இம் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் தென்னை வளமிக்க முல்லை மாவட்டத்தில் தென்னைச் செய்கையை மேலும் பரவலாக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக இந்நிறுவனத்தினது செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

## 'யானை'க்கு ஆதரவு தேடி படையினர்மிரட்டல்ஆரம்பம்

(மட்டக்களப்பு)
கிழக்கில் அடுத்தவருட முற்பகுதியில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்படும் என அரசு அறிவித்ததையடுத்து மிரட்டல் பிரசார நடவடிக்கையில் இராணுவத்தினர் இறங்கியுள்ளனர். மட்டக்களப்பில் கிராமங்களை சுற்றி வளைக்கும் படையினர் அங்குள்ள மக்களை ஓரிடத்தில் கூடுமாறு உத்தரவிடுகின்றனர். இவ்வாறு ஒன்றுகூடும் மக்களிடையே இராணுவ அதிகாரிகள் ஆளும் ஐ.தே.க. விற்கு ஆதரவாக யானை சின்னத்திற்கு வாக்களிக்குமாறு மிரட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 8ஆம் திகதி சின்னவத்தை இராணுவ முகாமை சேர்ந்த படையினர் நெடிய வெட்டை கிராமத்தை சுற்றி வளைத்தனர். நெடிய வெட்டை அம்மன் கோவிலில் கூடுமாறு பொதுமக்களுக்கு உத்தரவிடப்பட்டது. அங்கு இராணுவ அதிகாரிகள் தேர்தல் கருத்தரங்கை நடத்தினர். இங்கு உரையாற்றிய இராணுவ அதிகாரிகள் தேர்தல் நடைபெறும்போது யானை சின்னத்திற்கே வாக்கு போடுமாறு மிரட்டினர்என தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய தேர்தல் கருத்தரங்குகளால் மக்கள் மத்தியில் அச்சநிலை ஏற்பட்டுள்ளது,



தென்மராட்சியின் வீறு கொண்ட மாவீரன்

## கப்டன் வீமன்

(நாகையா சுப்பிரமணியம், ராசன், மணியம்)

| பிறப்பு: | மாவீரராக: |
|---|---|
| 19-4-1965 | 24-11-1992 |

திதி: 13-12-1993

இந்நாளில் பாச உள்ளங்கள் அனைவரும் அவரை நினைவு கூருவோமாக.

கிராம்புவில்,
சாவகச்சேரி. (6667)

குடும்பத்தினர்.

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### லெப். தேனருவி (ரஜித்தா)

(மீரா இராமச்சந்திரன்)

| பிறப்பு: | வீரச்சாவு: |
|---|---|
| 05-06-1975 | 24-11-1992 |

தாராளம் கொண்ட நெஞ்சம்
தமிழரின் நாட்டிற் கொண்ட
ஆராத காதல், நல்ல
அன்பினைக் கண்ட உள்ளம்
போராடிப் பெற்ற வெற்றி
பொழுதெலாம் கொடுக்கும் நங்கை
மீராவே எங்கே உன்னை
மீண்டுமோர் பொழுதிற் காண்போம்?

கண்டி வீதி,
சாவகச்சேரி. (சி-7978)

- குடும்பத்தினர்.

12-11-1972 24-11-1992

பலாலியில் உனை பகை
வீழ்த்தியதால்
கும்புறுமூலை ஒன்றும் கண்ணீர்
வடிக்காது — எழும்;
படையணியாகி பகையினை
முடிக்க புறப்பட்டுப் போகும்
எதிரிகள் பாசறை நடுங்கும்!
பெண்கள் படையொன்று
ஊரிலே உலவும்.

- போராளிகள்

(6640)

### சுன்னாகத்தில் மாவீரர் வரலாறு பந்தல்

(கொழும்புத்துறை)

சுன்னாகத்தில் மாவீரர் தினத்தை முன்னிட்டு மிகப் பிரமாண்டமான பந்தல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இப்பந்தலில் போராட்ட கால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் படங்களும், மாவீரர் படங்களும் தொங்க விடப்பட்டுள்ளன. (24)

(மட்டக்களப்பு)

கிழக்கில் அடுத்தவருட முற்பகுதியில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்படும் என அரசு அறிவித்ததையடுத்து மிரட்டல் பிரசார நடவடிக்கையில் இராணுவத்தினர் இறங்கியுள்ளனர். மட்டக்களப்பில் கிராமங்களை சுற்றி வளைக்கும் படையினர் அங்குள்ள மக்களை ஓரிடத்தில் கூடுமாறு உத்தரவிடுகின்றனர். இவ்வாறு ஒன்றுகூடும் மக்களிடையே இராணுவ அதிகாரிகள் ஆளும் ஐ.தே.க. விற்கு ஆதரவாக யானை சின்னத்திற்கு வாக்களிக்குமாறு மிரட்டி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 8ஆம் திகதி சின்னவத்தை இராணுவ முகாமை சேர்ந்த படையினர் நெடிய வெட்டை கிராமத்தை சுற்றி வளைத்தனர். நெடிய வெட்டை அம்மன் கோவிலில் கூடுமாறு பொதுமக்களுக்கு உத்தரவிடப்பட்டது. அங்கு இராணுவ அதிகாரிகள் தேர்தல் கருத்தரங்கை நடத்தினர். இங்கு உரையாற்றிய இராணுவ அதிகாரிகள் தேர்தல் நடைபெறும்போது யானை சின்னத்திற்கே வாக்கு போடுமாறு மிரட்டினர்என தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய தேர்தல் கருத்தரங்குகளால் மக்கள் மத்தியில் அச்சநிலை ஏற்பட்டுள்ளது,

# ஆண்டொன்று போயினதோ!



## கப்டன் மலரவன் (லியோ)

### (காசிலிங்கம் விஜிந்தன்)

| மண்ணில் மலராய்: | மண்ணில் வித்தாய்: |
|---|---|
| 08-04-1972 | 24-11-1992 |

'போர் உலா' வரப் புறப்பட்ட வேங்கையே!
மாவீரர் வாரமதில் மாற்றானின் வேலியை அழித்து,
காவலரண்களைச் சிதைத்து, ஆயுதங்களை அள்ளிவிட்ட
களிப்புடனே உதிர்ந்து போனாய்! 'கப்டன் மலவரன்' ஆனாய்.

மலரான நீ உதிர்ந்து மாதங்கள் பன்னிரண்டாம் - முழு
நிலவாக நின் வதனம் பசுமையாய் எம்மிதயங்களில் பவனி வர,
காலமெலாம் உன் நினைவால் கலங்கித் தவித்திருப்போம்
ஞாலத்தில் எம்முயிர் நிலைக்கும் வரை.

மலரே! உனைப்பிரிந்து தவித்திடும் நெஞ்சுடையார்
பலரே! பெற்றாரும், உற்றாரும், உடன் பிறந்தாரும் - நீ
பாசத்தால் கவர்ந்திட்ட நெஞ்சங்களும் இங்கே - நின் கல்லறையில்
நேசமுடன் மலர் தூவி நெக்குருகி நிற்கின்றார் - நீ அறிவாயோ!

'புயற்பறவை' யாய் நீ புனைப்பெயர் பூண்டு
இயற்றிய கவிதைகள் பொருள்நயங் கொண்டு - தொடர்
ஓலமாய் ஒலித்திடும் எம்மவர் துயரங்களை
காலத்தின் பதிவுகளாய் தாயகத்தில் உணர்த்தி நிற்கும்.

விடியலுக்காய் வித்தாகி வீழ்ந்தவனே! - விஜிந்தா!
மடிந்தாய் மண்ணுக்காய் - மறவனாகி, மாற்றானை அழித்தாய்
தாயகமாம் தமிழீழம் மலர்ந்திடும் வேளை - மலரவனே!
சேயாக நீ மலர்வாய்! தாயக மண்ணில் தவழ்ந்திடுவாய்!

மண்ணுக்காக மரணித்த மாவீரச்செல்வங்கள் - அத்தனை பேருக்கும் கண்ணீரைக் காணிக்கையாக்கி அஞ்சலி செய்கிறோம்.

(6672)

- குடும்பத்தினர்

## 3-ம் ஆண்டு நினைவலைகள்

| பொலிகை மண்ணில் | | பொலிகை மண்ணிற்காக |
|---|---|---|
| 09 |  | 24 |
| — | | — |
| 03 | | 11 |
| — | | — |
| 1975 | | 1990 |

நினைவில் மலர்ந்த...!
பொலிகை மண்ணின் மானம் காத்த!
முதற் களப்பலியான! பொலிகை மண் பெற்றெடுத்த

காவிய நாயகி

### 2-வது லெப். பொன்னி

(செல்லமாணிக்கம் பிரமிளா (பாமா)

பொலிகண்டிச் சந்தி, பொலிகண்டி.

அண்ணாவென்று அழைத்தாய்!
ஆசையோடு கதைத்தாய்!
பண்பாகப் பழகினாய்!
பாசத்தோடு உறவாடினாய்!

24-11-90 அன்று மாங்குளம் எதிரிப்படைமுகாம் அழித்து! காற்றோடு காற்றாய் கலந்து விட்ட எம் காவியக் கண்மணி 2-வது லெப். பொன்னி!!!

இவருடன் வீரச்சாவை அணைத்துக் கொண்ட அனைத்துப் போராளிகளுக்கும் எமது வீரத்தின் கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம்!

பாமா! உன்னுடைய இந்நாளில்!!
அண்ணன் யூட்!!! அக்கா யூட்டி இவர்களையும்
எமது இதயத்தில் வைத்து ஆராதிக்கின்றோம்.

(6652)

-- குடும்பத்தினர்

நல்லூர் [illegible] நூலகம்
[illegible]
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

ஆற்றை நீந்திக் கடந்தவருக்கு
வாய்க்கால் எம் மாத்திரம் — தமிழ்ப்பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 24-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
த. பெ எண் - 05

## தவறு வேறு எங்கோ...

சிறிலங்கா அரசியற் தலைமைப் பீடத்தைப் போன்றே இராணுவத் தலைமைப் பீடமும் குழம்பிப்போயுள்ளது, பூநகரியில் ஏற்பட்ட இக்குழப்பத்தில் இருந்தும், அதிர்ச்சியிலிருந்தும் இராணுவத் தலைமைப்பீடம் மீளும் முன்னரே அரசியல்வாதிகளினதும், பத்திரிகைகளினதும் கண்டனத்தை இராணுவத் தலைமைப்பீடம் எதிர்கொள்ள வேண்டி வந்தது. இந்நிலையில்தான் வடபகுதிக்கான இராணுவக் கட்டமைப்பில் இராணுவத் தலைமைப்பீடம் மாற்றங்களை அறிவித்துள்ளதோடு, புதிய தளபதிகளையும் நியமித்துள்ளது.

இம்மாற்றத்தின் பிரகாரம், யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களிலும் உள்ள இராணுவத்தினருக்கென இணைப்பதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இப்பொறுப்பை ஏற்றுள்ள பிரிகேடியர் அசோக ஜெயவர்த்தனா, புதிதாக மேற்கொள்ளப்படவுள்ள இராணுவ நடவடிக்கைகளுக்கான திட்டங்களை வரைவதோடு, இவ் இராணுவ நடவடிக்கைகளுக்குக் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரியாகவும் செயற்படுவார் எனவும் அறிவிக்கப்படுகின்றது,

சிறிலங்காவின் அண்மைக்கால இராணுவ வரலாற்றில் ஒவ்வொரு தோல்வியின் பின்பும் இராணுவக் கட்டமைப்பில் மாற்றமும், அதிகாரமாற்றமும் வழமையான தொன்றாகவே மாறியுள்ளது. இதன் பிரகாரம் புதிய அமைப்புக்கள் உருவாக்கப்படுவதும், பின்னர் ஒரு தோல்வியின் பின்னர் அவை கலைக்கப்படுவதும், ஒரு அதிகாரியிடம் இருந்து மற்ற அதிகாரியிடம் அதிகாரங்கள் மாற்றப்படுவதும் நடைமுறையாக மாறியுள்ளது. கடந்த இரண்டு வருடங்களில் நான்கு தடவை இவ்வாறான அதிகார மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு தோல்வியின் பின்பும் இராணுவக் கட்டமைப்பில் மாற்றங்கள் செய்யப்படுவது போன்று, விசாரணைக் கமிஷன்களும் அமைக்கப்படுவதும் வழக்கமாகி விட்டது. இது லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட ஒன்பது அதிகாரிகள் கொல்லப்பட்ட அராலி கண்ணி வெடித் தாக்குதலில் இருந்து கட்டைக்காட்டு மினிமுகாம் தகர்ப்பு, மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு, ஒப்பரேசன் யாழ்தேவி இராணுவ நடவடிக்கை தோல்வி, பூந

# மாவீரர் தலைமுறையே அவர்களை போற்றுகிறது

ஏனைய நாடுகளில் போராட்டங்களில் ஈடுபட்ட போராளிகள் - மாவீரர்கள் மறக்கடிக்கப்பட்டது போல் எமது போராளிகள், மாவீரர்கள் மறக்கடிக்கப்படக் கூடாது. அந்தப் போராளிகளின் குடும்பங்கள் அவலத்திற்கு உள்ளானதைப் போல் எமது போராளிகள், மாவீரர்களின் குடும்பங்கள், பெற்றோர்கள் அவலத்திற்கு உள்ளாகக் கூடாது. என்றுதான் எமது தலைவர் பிரபாகரன் மாவீரர் நாளை அவர்கள் தலைமுறையிலேயே நினைவு கூரப்பட வேண்டும் என்று விரும்பினார்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் அந்த நாட்டு மக்களுக்காக அந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடி உயிர் நீத்த வீரர்கள் அந்தந்த நாட்டு அரசுகளாலும், மக்களாலும் போற்றி நினைவு கூரப்படுகின்றனர். அவர்களுக்காக மாவீரர் நாள் தேசிய நாள் என்றெல்லாம் கொண்டாடப்படுகின்றன. அவ்வாறே நாமும் இன்று எமது நாட்டின் விடுதலைக்காக- இனத்தின் விடிவிற்காகப் போராடி தம்முயிரை ஈந்த வீரர்களை எமது விடுதலைப் போராட்டத்தை நடத்திக் கொண்டே நினைவு கூருகின்றோம். அவர்களுக்காகமாவீரர் நாளை எழுச்சி நாளாக சிறப்புற கொண்டாடுகிறோம்.

வேறு நாடுகளில் மாவீரர் நாள் கொண்டாடப்படுவதற்கும் நாம் மாவீரர் நாள் கொணடாடுவதற்கும் வேறுபாடுகள் உண்டு ஏனைய நாடுகளிலெல்லாம் விடுதலைக்குப்பின் அரசுகள் விழாக்களை எடுக்கின்றன. நாமோ விடுதலைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம். அவர்களது பெற்றோர்களை - குடும்பங்களை சிறப்பிக்கின்றோம்.

சோவியத் ரஷ்யாவை எடுத்துக் கொண்டால் அங்கு நாட்டின்விடிவுக்காக-நாட்டு மக்களின் விடுதலைக்காக- அந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் செய்த ஈகங்கள் தாங்கிய இடர்கள் எடுத்து விளக்க முடியாத அளவிற்கு மிகுதியாக இருந்தன. கொடுங்கள் அவர்களின் காலத்தில் மக்களால் மதிக்கப்படவில்லை - போற்றப்படவில்லை. அவர்களில் பலரது குடும்பங்கள் கவனிக்கப்படுவாரற்று மிகுந்த அவலத்துக்குள்ளாயின.

இந்த வரலாறுகளையெல்லாம் விடுதலைப் போராட்ட வரலாற்று நூல்கள் மூலம் படித்தவர் எமது தலைவர் பிரபாகரன் அவர்கள். அந்தப் போராளிகள், மாவீரர்கள் மறக்கடிக்கப்பட்டது போல் எமது போராளிகள், மாவீரர்கள் மறக்கடிக்கப்படக் கூடாது; அந்தப்போராளிகள் குடும்பங்கள் அவலத்திற்கு உள்ளானதைப்போல் எமது போராளிகள், மாவீரர்களின் குடும்பங்கள், பெற்றோர்கள் அவலத்திற்கு உள்ளாகக்கூடாது என்று முடிவெடுத்தார்.

அதனால் போராளிகள், மாவீரர்கள் அவர்கள் தலைமுறையிலேயே போற்றப்பட வேண்டும். அவர்கள் ஈகங்களும், வீரங்களும், மக்களிடம் எடுத்துச் சொல்லப்படவேண்டும். அந்த மாவீரர்களின் குடும்பங்கள் அவலப்படக் கூடாது என்பதற்காக எமது தலைவரின் எண்ணத்திலிருந்து உருவானதுதான் இந்த மாவீரர் நாள். எமது மாவீரர்கள்அனைவரினதும் நினைவு நாட்களில் நினைவு கூரும் நிகழ்வுகளில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படலாம். அவற்றைத் தவிர்ப்பதற்காகவே ஒரே நாளில் அனைத்து வீரர்களையும் நினைவு கூரும் வகையில் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலத்திலேயே மாவீரர்களைநினைவு

> *1991 ஆம் ஆண்டில் மாவீரர் நாள் கொண்டாடப்பட்டபோது யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினரும், தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளருமான வெ. இளங்குமரன் அவர்கள் ஆற்றியஉரை, மாவீரர் வாரத்தை முன்னிட்டு இங்கு மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.*

இன்று இத்தகைய வளர்ச்சியைப் பெறுவதற்கு அடித்தளமாக இருந்த இயக்கத்திற்கு உரமாகி விட்ட தோழர்களின் ஆற்றல்களையும், வீரத்தையும் நினைவுகூர அவர்கள் பெற்றோரை, குடும்பத்தினரை சிறப்பிக்க மாவீரர் நாளைக் கொண்டாடுகிறோம்

எமது இயக்கத்தில் முதற் களப்பலியான வீரன் லெப்டினன்ட், சத்தியநாதன். அவன் வீரச்சாவை அணைத்த நவம்பர் 27 ஆம் நாளையே எமது தலைவர் மாவீரர் நாளாகத் தேர்ந்தெடுத்தார். 1989-ம் ஆண்டில் நாம் முதலாவது மாவீரர் நாளை கொண்டாடிய போது அதற்கு முந்தைய ஏழு ஆண்டுகளில் வீரச்சாவை அணைத்துக் கொண்ட 1307 போராளிகளை நினைவு கூர்ந்தோம்: அடுத்த ஆண்டு மேலும் ஆயிரம் மாவீரர்களைச் சேர்த்து 2300 போராளிகளை நினைவுகூர்ந்தோம்

இந்த நன்நாளிலே எழுச்சி நாளிலே களத்தில் விழுப்புண்ணேற்று உடலிலிருந்து குருதி கொட்டிய போதும் தனது கைத் துப்பாக்கி எதிரியின் கையில் பிடிபட்டு விடக் கூடாது. அது இயக்கத்திடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற உறுதியுடன் 2 மைல் தூரம் ஓடிச் சென்று தன் ஆயுதத்தை இயக்கத்திடம் ஒப்படைத்த சங்கரனை எண்ணிப் பார்க்கின்றேன்

தனது இழுப்பு நோயின் துன்பத்துக்கிடையில் இயக்கத்தின் பெரும் பொறுப்பு வாய்ந்த பணிகளை மேற்கொண்டு வந்ததுடன் தான் உயிருடன் இருக்கும் வரை தனது ஆயுதக்களஞ்சியம் எதிரியிடம் பிடிபடக் கூடாது என்ற எண்ணத்துடன் இறுதி வரை போராடி மடிந்த கப்டன் பண்டிதரை எண்ணிப் பார்க்கிறேன்.

இரண்டு தடவைகள் விழுப்புண்ணேற்று மீண்டும் களத்தில் இறங்கி வீரச்சாவை அணைத்துக் கொண்ட ஆசிர் சீலனை எண்ணிப் பார்க்கின்றேன்

இயக்கத்தின் தொடக்க காலத்தில் பயிற்சிக்கான துப்பாக்கிகளையும், ரவைகளையும் கொண்டு வந்து குவித்த லெப்டினன்ட்செல்லக்கிளியை எண்ணிப் பார்க்கிறேன்.

## மக்கள் கண்ட மாவீரர்

எங்கள் மண்ணைக் காக்க எழுந்தவர்
எதிரிப் படையைத் தாக்கி விழுந்தவர்
எங்கும் புலிக்கொடி பறக்க முயன்றவர்
எதையும் எளிதில் அறிந்து பயின்றவர்
அங்கும் இங்கும் ஓடி உழைத்தவர்
அதனால் தமதுடல் வாடி இளைத்தவர்
பொங்கும் தலைவனாய் தம்பியைப் பெற்றவர்
போர்க்கலை அவனை நம்பியே கற்றவர்

சிங்கப் படைகள் சிதறிட வென்றவர்
சிறுத்தையாய் அவரைக் குதறியே கொன்றவர்
இங்கோர் புதுயுகம் காணவே துடித்தவர்
இறப்பிலும் கொள்கையை இறுக்கமாய்ப் பிடித்தவர்
வங்கக் கடலிலும் வரலாறு படைத்தவர்
வரும்பகைக் கப்பலை வழியிலே உடைத்தவர்
தங்கத் தமிழீழத் தாகம் உடையவர்
தன்னிகரில்லாத் தனிப்பெரும் படையவர்

அங்கங் குறையினும் அடிபடத் துணிந்தவர்
அறத்துக்கும் அன்புக்கும் என்றுமே பணிந்தவர்
கங்குல் பகலெலாம் கடமையில் அலைந்தவர்
கரும்புலியாகியே காற்றுடன் கலந்தவர்
மங்கையர் பெருமையை எங்குமே அறைந்தவர்
மாவீரராகி எம் மனங்களில் உறைந்தவர்
சங்கத் தமிழினை அரியணையேற்றுவர்
சாதனை படைத்த பின் அனைவரும் போற்றுவர்.

க. இ. சர்மா
கொக்குவில்.

## நேற்று...இன்று...நாளை...

நினைத்த எதையும் முடித்து நிற்கும்
நிலைமை செழித்த அந்தக் காலம்
பணத்தின் பெருக்கம் பலதும் கொடுக்க
பசியும் அறியா உடல் கொழுத்த காலம்
விடியும் வரைக்கும் களித்தும் ஆடி
விருந்தும் உண்டு சுவைத்த காலம்
முடிவில் அனைத்தும் மனதும் வெறுக்கும்
அடிமை வாழ்வின் இழிவும் காலம் - அதுவே அந்தக் காலம்

அடுத்து புசிக்க எதுவும் இன்றி
அலைந்து உலையும் இந்தக் காலம்
தொடுத்து முகிலும் குண்டு பொழிய
துயரக் கடலுள் (நாம்) மூழ்கும் காலம்
வளங்கள் குலைய, மனைகள் சிதைய,
வாழ்வு தொடரும் போர் வரவு காலம்
முழங்கும் இடியாய் - தமிழன் எழுந்தும்
முரசம் அறையும் இதுவே விடியல் காலம்

தருமம் நிலைக்க தமிழும் கொழிக்க
தனிநாடும் மலரும் நாளைய காலம்
பெருகும் உணர்வும் வளரும் கொடையும்
கொடுக்கும் மகுடம் தரிக்கும் காலம்
அருளும் தலைவன் ஆற்றல் அறிந்தும்
அகில உலகம் வியக்கும் காலம்
பொருளும் உணர்ந்து, புதைகுழிகள் தொழுது
பொழுதும் புலரும் அதுவே போற்றும் புனித காலம்

கவிஞன் - வல்வை

## தன் நாட்டுப் பற்று

னுவ நடவடிக்கைகளுக்குக் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரியாகவும் செயற்படுவார் எனவும் அறிவிக்கப்படுகின்றது,

சிறிலங்காவின் அண்மைக்கால இராணுவ வரலாற்றில் ஒவ்வொரு தோல்வியின் பின்பும் இராணுவக் கட்டமைப்பில் மாற்றமும், அதிகாரமாற்றமும் வழமையான தொன்றாகவே மாறியுள்ளது. இதன் பிரகாரம் புதிய அமைப்புக்கள் உருவாக்கப்படுவதும், பின்னர் ஒரு தோல்வியின் பின்னர் அவை கலைக்கப்படுவதும், ஒரு அதிகாரியிடம் இருந்து மற்ற அதிகாரியிடம் அதிகாரங்கள் மாற்றப்படுவதும் நடைமுறையாக மாறியுள்ளது. கடந்த இரண்டு வருடங்களில் நான்கு தடவை இவ்வாறான அதிகார மாற்றங்கள் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு தோல்வியின் பின்பும் இராணுவக் கட்டமைப்பில் மாற்றங்கள் செய்யப்படுவது போன்று, விசாரணைக் கமிஷன்களும் அமைக்கப்படுவதும் வழக்கமாகி விட்டது. இது லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ உட்பட ஒன்பது அதிகாரிகள் கொல்லப்பட்ட அராலி கண்ணி வெடித் தாக்குதலில் இருந்து கட்டைக்காட்டு மினிமுகாம் தகர்ப்பு, மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு, ஒப்பரேசன் யாழ்தேவி இராணுவ ந்டவடிக்கை தோல்வி, பூநகரி படைத்தளம் தகர்ப்பு என நீண்டுகொண்டே செல்கின்றது.

ஆனால் இம்மாற்றங்கள், விசாரணைகள் எவையும் முன்னேற்றகரமாக எதையும் சாதிக்க உதவியதாக இல்லை. மாறாக எனது தலைமையில் இவ்வளவு இராணுவத்தினரும், ஆயுதத் தளபாடமும் இழக்கப்பட்டது எனவும், எனது தலைமையில் இவ்வளவு இராணுவத்தினரும் ஆயுதத் தளபாடமும் இழக்கப்பட்டது எனவும் அதிகாரிகள் ஒப்பிட்டுப் பார்த்து குறைந்த தொகையில் உள்ளவர் பெருமை பேசிக் கொள்ளவே இது உதவியது.

இதனை நோக்கும்போது சிறிலங்கா இராணுவத் தலைமைப் பீடமும் அரசாங்கமும் தோல்விக்கான காரணத்தைப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. அதாவது தோல்விக்கான காரணம் இராணுவக் கட்டமைப்பிலும், அதிகாரிகளின் திறமையின்மையிலும் இருப்பதை விட வேறு எங்கோ இருப்பதை அவர்கள் கண்டுகொள்ளவில்லை.

அதாவது பிரிட்டனிடம் இருந்து சிறிலங்கா அரசியலமைப்பை இரவல் வாங்கியது போன்றே இராணுவக் கட்டமைப்பையும் இரவல் வாங்கிக் கொண்டது. அதன் பின்னர் கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கையில் உலகப் புகழ் பெற்ற இஸ்ரேலிடம் இருந்து ஆலோசனையைப் பெற்றதோடு, அதற்கேற்ப இராணுவத்தை புனரமைத்துக் கொண்டது. அதாவது உலகப் போர்களில் வெற்றிக்கு அடிகோலிய பிரிட்டனிடம் இராணுவக் கட்டமைப்பையும், அரபுநாடுகள் பலவற்றைத் தோற்கடித்ததோடு, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் கொரில்லா நடவடிக்கைகளையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்த இஸ்ரேலின் ஆலோசனையையும் கொண்ட ஒரு சிறந்த இராணுவ கட்டமைப்பையே சிறிலங்கா பெற்றுள்ளது ஆகையினால், சிறிலங்கா சந்திக்கும் தோல்விகள் இராணுவ கட்டமைப்பில் உள்ள தவறல்ல. எதிர்த்தரப்பில் உள்ளவர்களின் ஆற்றலும், அவர்களின் போராட்டத்தின் தார்மீக பலமுமே காரணமாகும்.

இந்த வகையில் நோக்கும் போது இராணுவ ரீதியான வெற்றி என்பது இராணுவக் கட்டமைப்பு மாற்றத்தினாலும், விசாரணைக் கமிசனின் அறிக்கைகளினாலும் கிட்டிவிடப் போவதில்லை என்பதை சிறிலங்கா புரிந்து கொள்ள வேண்டும். அதாவது காலத்திற்குக் காலம் அதிகாரத்தை தலைக்குத் தலை மாற்றினாலும், இராணுவ வெற்றி சாத்தியமாகப் போவதில்லை. ஒரு சிறப்பானதலைமையைக் கொண்ட தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியாக வெற்றி கொள்ள முடியாது என்பதை உலகம் ஏற்றுக் கொண்டதை சிறிலங்காவும் ஏற்றுக் கொண்டு இனப் பிரச்சினைக்கு மாற்றுவழி தேடுவதே சரியான வழி.

சிறப்புற கொண்டாடுகிறோம்.

வேறு நாடுகளில் மாவீரர் நாள் கொண்டாடப்படுவதற்கும் நாம் மாவீரர் நாள் கொணடாடுவதற்கும் வேறுபாடுகள் உண்டு ஏனைய நாடுகளிலெல்லாம் விடுதலைக்குப்பின் அரசுகள் விழாக்களை எடுக்கின்றன. நாமோ விடுதலைப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம். அவர்களது பெற்றோர்களை - குடும்பங்களை சிறப்பிக்கின்றோம்.

சோவியத் ரஷ்யாவை எடுத்துக் கொண்டால் அங்கு நாட்டின்விடிவுக்காக-நாட்டு மக்களின் விடுதலைக்காக- அந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் செய்த ஈகங்கள் தாங்கிய இடர்கள் எடுத்து விளக்க முடியாத அளவிற்கு மிகுதியாக இருந்தன. கொடுங்கோலர்களிடமிருந்து நாட்டை மீட்பதற்காக பொது உடைமை ஆட்சியை ஏற்படுத்துவதற்காக தம்மை ஈந்த மாவீரர்கள்போராட்ட காலத்தில் அங்கு பெருமளவில் போற்றிச் சிறப்பிக்கப்படவில்லை.

அக்டோபர் புரட்சி வெற்றி பெற்றதன் பின்னர் சோவியத் ஆட்சியேற்ற பின்முதலாவது ஆண்டு நிறைவு விழாவின் போதுதான் சிந்தனையாளர்களுக்கும், மக்களின்விடிவுக்காக - விடுதலைக்காகப் போராடி மடிந்த மாவீரர்களுக்குமாக முதலாவது நினைவுத்தூண் எழுப்பப்பட்டது மாஸ்கோ நகரில் கிராம்களினின்அலெக்சாண் ரோவ்ஸ்கி பூங்காவில் அந்த நினைவுக்கல் திறக்கப்பட்டது.

ஏன் அண்டையிலுள்ள இந்தியாவிலே கூட விடுதலைக்காகப் போராடி மடிந்த மாவீரர்கள் அவர்களின் காலத்திலேயே போற்றப்படவில்லை. அவர்களின் குடும்பங்கள் சிறப்பிக்கப்படவோ, கவனிக்கப்படவோ இல்லை. விடுதலைப் போராட்டத்திற்காக உண்மையாக உழைத்தவர்கள் பலர் இன்னும் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளனர். விடுதலைக்காகப் போராடிய மாவீரன் செண்பகராமன் நூற்றாண்டில் கூட இந்திய அரசோ மக்களோ அவனைக் கௌரவிக்கவில்லை. இன்று வானளாவப் புகழப்படுகின்ற பாரதியார் இறந்த போது அவரது இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் பதினொரு பேர்தான்.

பகத்சிங், வாஞ்சி நாதன், வ. வே. சு ஐயர், ஜதீஸ்திர நாத்தாஸ், அம்பிகா சக்கரவர்த்தி, சூர்யாசென், கல்பருதத், சுசீலாதேவி, துர்க்காதேவி, எம். என். ராய் போன்ற பல ஆயிரக்கணக்கான மாவீரர்கள் இந்திய விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போராடியவர்கள். அவர்

1991 ஆம் ஆண்டில் மாவீரர் நாள் கொண்டாடப்பட்டபோது யாழ் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினரும், தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளருமான வெ. இளங்குமரன் அவர்கள் ஆற்றிய உரை, மாவீரர் வாரத்தை முன்னிட்டு இங்கு மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது.

நாட்களில் நினைவு கூரும் நிகழ்வுகளில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படலாம். அவற்றைத் தவிர்ப்பதற்காகவே ஒரே நாளில் அனைத்து வீரர்களையும் நினைவு கூரும் வகையில் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலத்திலேயே மாவீரர்களைநினைவு கூரவும் மாவீரர்கள் பெற்றோர்களை கௌரவிக்க வேண்டும் எனத் தலைவரால் அறிவிக்கப்பட்டதுதான்இந்த மாவீரர் நாள்

எமது தலைவர் போராட்டத்தை எப்படி உலகம் வியக்கும் வகையில் நடத்திச் செல்கிறாரோ போராட்ட வெற்றியில் எவ்விதம் கவனம் செலுத்துகிறாரோ அதே ஈடுபாட்டை போராளிகள் மீதும் அவர்களின்குடும்பங்கள் மீதும் செலுத்துகின்றார். கிடைத்தற்கரிய அருங் குணங்களும், ஆற்றலும் கொண்ட தலைவர் எமக்கு கிடைத்திருக்கிறார்

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பியர்களிடம் இழந்துவிட்ட எமது இனத்தின் இறைமையை மீட்டெடுக்க அன்று போராடாது வீரம் குன்றி எழுச்சியற்றிருந்த எமது இனத்திடையே நீண்ட காலமாக அடிமைப்பட்டு விடுதலை வேட்கையோ உணர்ச்சியோ அற்றிருந்த எம்மினத்திடையே ஆற்றல்மிக்க எமது தலைவர் பிரபாகரனால் கட்டி எழுப்பப்பட்ட தமிழீழ மக்கள் படையான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வீரமும், ஆற்றலும் கொண்ட பேரியக்கமாக இன்று உருவெடுத்துள்ளது.

ணிப் பார்க்கின்றேன்

தனது இழுப்பு நோயின் துன்பத்துக்கிடையில் இயக்கத்தின் பெரும் பொறுப்பு வாய்ந்த பணிகளை மேற்கொண்டு வந்ததுடன் தான் உயிருடன் இருக்கும் வரை தனது ஆயுதக்களஞ்சியம் எதிரியிடம் பிடிபடக் கூடாது என்ற எண்ணத்துடன் இறுதி வரை போராடி மடிந்த கப்டன் பண்டிதரை எண்ணிப் பார்க்கிறேன்.

இரண்டு தடவைகள் விழுப்புண்ணேற்று மீண்டும் களத்தில் இறங்கி வீரச்சாவை அணைத்துக் கொண்ட ஆசிர் சீலனை எண்ணிப் பார்க்கின்றேன்

இயக்கத்தின் தொடக்க காலத்தில் பயிற்சிக்கான துப்பாக்கிகளையும், ரவைகளையும் கொண்டு வந்து குவித்த லெப்டினன்ட்செல்லக்கிளியை எண்ணிப் பார்க்கிறேன்.

தன் தந்தையை இயக்கம் தண்டித்ததன் பின் இயக்கத்தில் இணைந்து களத்தில் உயிர் விட்ட கொள்கை மறவன் சைமனை எண்ணிப் பார்க்கிறேன்.

இந்திய அரசின் தன்னலத்துப் போக்கைத் தோலுரித்துக் காட்ட நீர் கூட அருந்தாது. சாகும்வரை உண்ணா விரதமிருந்து உயிர் நீத்த லெப்டினன்ட் கேணல் திலீபனை எண்ணிப்பார்க்கிறேன்

தமது சாவை முன்னரே குறித்துக் கொண்டு களத்தில் சிறந்த தம் உயிரை மாய்த்துக் கொண்டு போராட்டத்துக்கு எழுச்சியூட்டிய கரும்புலி வீரர்களை எண்ணிப் பார்க்கிறேன்-

இது போன்ற மாவீரர்களினது ஈகங்கள் தற்கொடைகளினால் தான் தமிழீழம் இன்று உலகின் கவனத்தை ஈர்த்து இன்று தலை நிமிர்ந்து நிற்கின்றது.

அந்த மாவீரர்கள் எந்த நோக்கத்துக்காக கொள்கைகளுக்காக தம்மைக் காணிக்கையாக்கினார்களோ அந்த நோக்கங்களை, கொள்கைகளை நிறைவேற்றுவோமென அந்த மாவீரர்களை நினைவு கூருமிந்நாளில் நாமனைவரும் உறுதியெடுத்துக்கொள்வோம் என்றும் அவர் தமது உரையில் தெரிவித்தார்.

## ஊழியர் மரணம் குறித்து நலன்புரிச்சங்கம் மகஜர்

(நமது நிருபர்)

அண்மையில் நடைபெற்ற புனித யாகப்பர் ஆலயத்தின் மீதான சிறிலங்கா விமானப் படையினரின் குண்டுத்தாக்குதலில் கடமையின் போது பலியான யாழ் மாநகரசபை ஊழியரின் மரணம் குறித்த கண்டன மகஜர் ஒன்றை யாழ் மாநகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கம் தயாரித்து வருகின்றது.

இம்மகஜரை யாழ் மாநகர சபைஊழியர்நலன்புரிச்சங்கம் யாழ் அரச அதிபரின் ஊடாக சிறிலங்கா அரசின் உயர் தலைவர்களுக்கும் மற்றும் ஏனைய அமைப்புக்களுக்கும் அனுப்பி வைக்கவுள்ளதாக யாழ் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும் யாழ் மாநகரசபை தண்ணீர் விநியோகப்பகுதி ஊழியரான யோன் சேவியர் என்பவரேபலியானவராவார் என்பதுகுறிப்பிடத்தக்கது(பா

அந்தக் காலம்

அடுத்து புசிக்க எதுவும் இன்றி
அலைந்து உலையும் இந்தக் காலம்
தொடுத்து முகிலும் குண்டு பொழிய
துயரக் கடலுள் (நாம்) மூழ்கும் காலம்
வளங்கள் குலைய, மனைகள் சிதைய,
வாழ்வு தொடரும் போர் வரவு காலம்
முழங்கும் இடியாய் - தமிழன் எழுந்தும்
முரசம் அறையும் இதுவே விடியல் காலம்

தருமம் நிலைக்க தமிழும் கொழிக்க
தனிநாடும் மலரும் நாளைய காலம்
பெருகும் உணர்வும் வளரும் கொடையும்
கொடுக்கும் மகுடம் தரிக்கும் காலம்
அருளும் தலைவன் ஆற்றல் அறிந்தும்
அகில உலகம் வியக்கும் காலம்
பொருளும் உணர்ந்து, புதைகுழிகள் தொழுது
பொழுதும் புலரும் அதுவே போற்றும் புனித காலம்

**கவிஞன் - வல்வை**

## தன் நாட்டுப் பற்று

நாடு பல சுற்றி வீடு வரு காலை
என்னாடிதுவென இறுமாப்புடனே
தன்னுளமுந்தத் தானெடுத் துரையா
நன்னல மில்லா நம்மவர் வாழ்வு
உடல் தனி ஓங்க உயிர் மடிந்தும்மே!

இத்தகைய மாந்தரின் இயல்பினை எண்ணுமின்
ஏமம் சான்ற நாமம் பெற்றும்
பல்லோர் ஏத்தும் செல்வம் உற்றும்
வளம் பல வாய்ப்ப வாழ்வினை வகுப்பினும்
தன்னலம் தாங்கிய தகைமை மிகுப்ப
இந்நிலப் புகழெலாம் இழந்தவராவார்
இருக்கும் போதே இறந்தவர் அன்னார்

இறந்த பின்னர் இவர் நிலை கேண்மின்!
திறம்படப் பேசுவோர் தினைத்துணை அன்றியும்,
இசை எல்லாம் இயற்றி இரங்குவோர் இன்றியும்,
பிறந்த மண்ணில் பின்னருந் சேர்ந்து
மறந்த மனிதராய் மதிக்கப் பெறுவதே!

**- க. கயிலாயநாதன்**

(19-ம் நூற்றாண்டின் விடுதலை வேட்கைப் புலவன் உவாஸ்ஹர் ஸ்கொட் (Sri Walter Scott) படைத்த love of native land என்ற படைப்பின் கருப் பொருளைத் தழுவி எழுதப்பட்டது)

## இரத்தினக்கல் அகழ்வுக்காக வெளிநாடுகளுடன் ஒப்பந்தம்

### உள்ளூர் அமைப்புக்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

இரத்தினக்கல் அகழ்வுக்காக வெளிநாட்டு நிறுவனங்களுடன் சிறிலங்கா அரசாங்கம் தற்போது செய்துகொண்டுள்ள ஒப்பந்தங்களுக்கு சிறிலங்கா இரத்தினக்கல் அகழ்வோர் எதிர்ப்புதெரிவித்துள்ளனர், இது தொடர்பாக எதிர்வரும் முதலாம் திகதியன்று எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நடத்தவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

தென்கொரிய நாட்டைச் சேர்ந்த பல நிறுவனங்களுடன் தற்போது ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், இதனால் களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களை சேர்ந்த பல உள்ளூர் அகழ்வு தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் எமது பாரம்பரிய சொத்துக்கள் இத்தகைய வெளியாரின் அகழ்வுகளால் சூறையாடப்பட்டு விடலாம் என்று இரத்தினபுரி நகரபிதா மகிந்த கருணாரட்ணா ஜனாதிபதி டி. பி, விஜேதுங்காவின்கவனத்துக்கு கொண்டுவந்திருப்பதாக பி. பி. ஸியின் சந்தேசிய சிங்கள ஒலிபரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது,

# தென்மராட்சி கெற்பலியில் மாவீரர் சோலை திறப்பு

காடு வளர்ப்பினையும் மர நடுகையினையும் ஊக்குவிக்கும் பொருட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் மாவீரர் வார நிகழ்வாக இன்று பகல் 12.00 மணிக்கு மாவீரர் சோலை திறந்து வைக்கப்படவுள்ளது. தென்மராட்சிக் கோட்டத்தில் கெற்பலி என்னும் இடத்தில் இம் மாவீரர் சோலை மரநடுகைத் திட்டம் திறந்து வைக்கப்படவுள்ளது.

மேலும் மாவீரர் நினைவாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்புபகுதியினால்யாழ் மாவட்டத்தில் 3000மரக்கன்றுகள் நடுகை செய்யப் பட்டுவருகின்றன.

## விடுதலைப்

விதமாகவும் சாவை அணைத்துக் கொண்ட மாவீரர்களின் பன்னிரண்டு இறுதி நேர நிகழ்வுகள் தொகுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 'எனது மக்களின் விடுதலைக்காக...-தலைவர் பிரபாகரனின் கருத்துத் தொகுப்பு' என்ற நூலின் அறிமுகவுரையும், 'வீட்டுக்கு வேலியல்ல; நாட்டுக்கு எல்லை வேண்டும்' என்ற கவியுரையும், 'தமிழர் திருநாள்' என்ற உருவகமும், இவ் இதழில் உள்ளடங்கியுள்ளன.

உலகவலம் பகுதியில் 'தி.மு.க வில் பிளவு; ஒரு பிராமணியச்சதி; 'இந்துமா சடலில்காலூன்றசீனா முயல்கின்றதா?' ஆகிய கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

# தி.மு.கவின் தலைவர் நானே! கோபால்சாமி பிரகடனம்!

(சென்னை)

தி.மு.கவின் உண்மையான தலைவர் தானே என வை. கோபால்சாமி பகிரங்கமாக அறிவித்ததை தொடர்ந்து திராவிட முன்னேற்றக்கழகம் இரண்டாக பிளவடைந்து விட்டது. நேற்று வை.கோபால்சாமி தி.மு.கவிலிருந்து வெளியேற்றப்பட்ட மாவட்ட செயலர்கள் மற்றும் உறுப்பினர்களுடன் கலந்தாலோசனை செய்த பின்னரே மேற்கண்டவாறு அறிவித்தார்.

கருணாநிதி கட்சித் தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் கட்சி பொதுக்குழு கூட்டத்தைகூட்டுமாறும் அதில் யாருக்கு பெரும்பான்மை உள்ளது என்பதை தாம் நிரூபிக்க முடியும் எனவும் கோபால்சாமி கூறியுள்ளார். வலிமைமிக்க மாவட்ட செயலாளர்கள் தி.மு.கவிலிருந்து வெளியேற்றப்பட்டதையடுத்தே கட்சி பிளவடையும்நிலை தோன்றியது.

எம். கண்ணப்பன், கணேசமூர்த்தி, மீனாட்சி சுந்தரம், செஞ்சி ராமசந்திரன், செல்வராஜ், லக்ஷ்மணன், ரட்ணராஜ் பொன் முத்துராமலிங்கம், மதுராந்தகம் ஆறுமுகம் ஆகியோரே வெளியேற்றப்பட்ட கட்சியின் மாவட்ட செயலர்களாவர்.

அத்துடன் கட்சியின் சட்டமன்ற பிரிவு, இளைஞர்அணி, தொழிலாளர் பிரிவு, மாணவர் பிரிவு என அனைத்து பிரிவுகளும் இதனால் பிளவடைந்துவிட்டன.

தனிக்கட்சியை தொடங்கி பார்க்குமாறு கோபால்சாமிக்கு கருணாநிதி சவால் விட்டார். ஆனால்கோபால்சாமி கட்சியின் கொடி, சின்னம், கட்சி தலைமையகம் என பலவற்றை கைப்பற்றவே முயற்சித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. பல்லாயிரம் சடலங்கள் மீது நடந்தே கோபால்சாமி கட்சி தலைமையகமான அண்ணா அறிவாலயத்தை கைப்பற்ற முடியும் என கருணாநிதி எச்சரித்துள்ளார். கருணாநிதிக்கு விசுவாசமான ஆயிரம் தொண்டர்கள் இங்கு காவல் செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சியில் இளைஞர் ஆதரவு கோபாலசாமிக்கு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## தென்மராட்சி

கும் மாவீரர் நினைவு வளைவுகள், நினைவுப் பந்தல்கள் வீதியலங்காரங்கள், பதாகைகள் மற்றும் சிவப்பு, மஞ்சள் வர்ணத்தோரணங்கள் ஆகியவையும் கட்டப்பட்டுள்ளன.

இம் மாவீரர் வாரத்தின் போது தென்மராட்சியின் அனைத்து வட்டப்பிரிவுகளிலும் சிரமதான இயக்கங்கள், ஆரம்பிக்கப்பட்டு பல சமூக நலத்திட்டங்களும், செயற்பாடுகளும் சிரமதானம் மூலமாக நடைமுறைப்படுத்தப் பட்டுவருகின்றன.

## வீரச்சாவு



### செல்வநாயகம் சசிகரன்
### (கப்டன் வெள்ளைத்தேவன் - நியூட்டன்)

புன்னாலைக்கட்டுவன் வடக்கை பிறப்பிடமாகவும், உரும்பராய் கிழக்கை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட செல்வநாயகம் சசிகரன் 22-11-93 திங்கட்கிழமை வீரச்சாவடைந்துவிட்டார். இவர் குருசாமி செல்வநாயகம், திருமதி செ இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மகனும், சுபாகரன், வசிகரன் (ஈழநாதம்), செல்வரஜனி (போராளி), ஜீவகரன், றாஜ்கரன், றாஜ்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஞானவைரவர் கோவில் வீதி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

தகவல்:
(இ) செ. வசிகரன்

# மாவீரர் வார கூட்டம் இன்று 6 இடங்களில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரஎழுச்சிக் கூட்டங்கள் வட்டரீதியாக நடைபெற்றுவருகின்றன. இம் மாவீரர் வார எழுச்சிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றி வருகின்றனர்.

இன்று ஆறு இடங்களில் மாவீரர் வார எழுச்சிக் கூட்டங்கள்:

ஃ சண்டிலிப்பாய் வட்டம் - மானிப்பாய் மாவீரர் கலையரங்கு இரவு 7.30 மணி

ஃ உடுவில் , தெல்லிப்பழை வட்டம்- சங்குவேலிப்பிள்ளையார் கோவில் முன்றல் இரவு 7.30 மணி

ஃ கொடிகாமம் வட்டம்-கச்சாய் அ. த. க. பாடசாலை இரவு 8.00 மணி

ஃ சரவெட்டிவட்டம்-சாமாணந்துறை பிள்ளையார் கோவில் முன்றல் இரவு 7.00 மணி

தீவகக் கோட்டம் - முஸ்லிம் பகுதி இரவு 7.30 மணி

கடற்புலிகள் - யாழ்மாவட்டம்

ஃவலிகாமம் கிழக்கு வட்டம்- கொழும்புத்துறை ச.ச. நிலையகலை யரங்கு

# ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் அமுலில் இருந்து வந்த ஊரடங்குச் சட்டம் இன்று புதன்கிழமை காலை 6மணி முதல் நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டு தலைமையகம் அறிவித்தது.

## உலகில்

தின் பல நாடுகளில் இராணுவத் தீர்வுகள் பலனளிக்கவில்லை.

இனப்பிரச்சினை சம்பந்தமாக எழுதப்பட்ட ஒப்பந்தங்களை மறுதலிப்பதில் சிறிலங்கா அரசுகளின் வரலாறு திகில் நிறைந்ததாகக் காணப் படுகிறது

1977 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு பின் ஏற்பட்ட காலகட்டங்களில் ஒப்பந்தங்களின் புனிதத் தன்மையையும், நிலையான கூட்டுக் கோட்பக்

## தமிழீழ

வெடித்தவர்களும் இன்னும் பலவிதமான வீரச்சாவுகளை அடைந்து முகங்களறியாது மறைந்து போனவர்களையும் சுமந்து எமது தேசம் பெருமைகொள்கிறது.

உறுதிமிக்க புரட்சிகரமான கொள்கையுடைய தலைவன் அணியிலே எமது போராட்டம் பலபரிமாணங்களைக் கடந்து கொண்டிருக்கின்றது பெண்மையும் வீரமே என்ற புதிய மரபினை உலகறியச் செய்து இந்த மண்ணினதும், சமூகத்தினதும் விடுதலைக்காக ஐந்நூறிற்கும் மேற்பட்ட பெண் மாவீரர்கள் இந்த மண்ணிலே வித்தாகியுள்ளனர். ஆண்களுக்குப் பெண்கள் எந்தவிதத்திலும் சளைத்தவர்களல்லர் என்பதை நிரூபணமாக்கி இவர்களது வரலாறு உலகை வியக்க வைத்திருக்கிறது. சமூகத்தில் பல உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலிருந்து ஒரு பாலரின் வளர்ச்சி ஏறத்தாழ ஒரு தசாப்தத்திற்குள்ளே வியக்கத்தகு வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்று தமிழீழம் தலை நிமிர்கிறது

முழுமையான வெற்றிக்கு ஆண், பெண் என்ற பேதமற்ற பலமான சக்தியே வழி கோலும் என்ற ஆறாயிரத்து நூறு மாவீரர்களினதும் தியாகங்கள் சான்று கூறும்.

எமது மண்ணின் விடிவுக்கு விலையாகக் கொடுத்த இந்த மாவீரர் நினைவுகளில் இவர்களின் கனவுகளை நெஞ்சோடு சுமந்து செல்கிறோம், நீண்டு பரந்த, கல்லறைகளில் மண்டியிட்டு, நவம்பர் 27ஆம் திகதியினை மாவீரர்தினமாகக்கொண்டு அவர்களை நினைவு கூருகிறோம். நவம்பர் 26ஆம் திகதி நள்ளிரவில் சுடர்விடும் தீபங்களில் பிரகாசித்தபடி பூத்திருக்கும் அவர்களின் முகங்களை, நினைவுகளை மனதிலிருத்தி எங்கள் குனிந்த தலைகளை மீண்டும் நிமிர்த்தி நிமிர்ந்து நிற்கிறோம். இந்த தேசம் நிமிர்வதற்காக பல்லாயிரம் வேங்கைகள் அணியில் செல்வோம் என்ற இறுதி இலட்சியத்துடன் எங்கள் பாதங்களை ஆழமாகப் பதித்துக்கொள்வோம் மாவீரர்களின் குருதிச்சுவடுகள்பற்றி உறுதிமிக்க எமது தேசத்தலைவனின் பின்னே உறுதியெடுத்துக் கொள்வோம். தமிழீழதேசம் தலைநிமிரும், அதுவே எமது தாகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ்.


வலிகிழக்கு
வடபகுதி ப. நோ. கூ. சங்கம் அச்சுவேலி
கூட்டுறவாளர்கள் நடாத்தும்

# மாவீரர் விழா

இடம்:- புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி புத்தூர்

காலம்:- 24-11-93புதன் இரவு 7-00மணி

தலைவர்:- திரு. க. பேரின்பநாயகம் அவர்கள் (தலைவர் ப நோ கூ. சங்கம்)

## நிகழ்ச்சிகள்

1. மங்கள விளக்கேற்றல்
2. மௌன அஞ்சலி
3. தலைமையுரை — திரு. க. பேரின்பநாயகம் (தலைவர்)
4. வரவேற்புரை — திரு. மூ. ஆனந்தகிருஷ்ணன் (பொது முகாமையாளர்)
5. நினைவுரைகள் — விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள்
6. நன்றியுரை — திரு த. கவீந்திரதாஸ் (செயலாளர்)

## கலை நிகழ்ச்சிகள்

விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டுக்


# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் பூமணி

கொட்டடியைச் சேர்ந்தவரும், தற்போது நவாலியில் வசித்தவருமாகிய நாகலிங்கம் பூமணி (23-11 93) நேற்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு. சின்னையா நாகலிங்கத்தின்(நாகலிங்கம்அன்சண்) அன்பு மனைவியும், என் குணபாலன், ஜே கமலாவதி, கே. கலாவதி, காலஞ்சென்ற என். ஜெயபாலன் ஆகியோரின் அன்புத்தாயாரும் கே. இன்பராணி, கே. ஜெயக்குமார், ரி. கார்த்திகேயன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24-11-93) கொத்துக்கட்டி மயானத்தில் இடம்பெறும். இவ்வறி

தலைவர்:- திரு. க. பேரின்பநாயகம் அவர்கள்
(தலைவர் ப நோ கூ. சங்கம்)

## நிகழ்ச்சிகள்

1. மங்கள விளக்கேற்றல்
2. மெளன அஞ்சலி
3. தலைமையுரை — திரு. க. பேரின்பநாயகம் (தலைவர்)
4. வரவேற்புரை — திரு. மூ. ஆனந்தகிருஷ்ணன் (பொது முகாமையாளர்)
5. நினைவுரைகள் — விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள்
6. நன்றியுரை — திரு த. கவீந்திரதாஸ் (செயலாளர்)

## கலை நிகழ்ச்சிகள்

**விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டுக் கழக ஆதரவில் உருவான கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.**

இங்ஙனம்
(சி-7985) கூட்டுறவு சேவையிலுள்ள
திரு. மூ. ஆனந்தகிருஷ்ணன்
(பொது முகாமையாளர்)

## 1-ம் ஆண்டு நினைவு



பிறப்பு: 21 - 05 - 1974
வீரச்சாவு: 24 - 11 - 1992

### லெப். முக்கண்ணன் (உமா)

**வெள்ளையா ஸ்ரீகருணன்**

உன் சாவு
இங்கு சரித்திரமாகியுள்ளது.
உன் தியாகம்
இம் மண்ணை
வெளிச்சமாக்கும்!

இன்று எமது இல்லத்தில் நிகழும் இவ் வஞ்சலி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள் நண்பர்கள், உறவினர் அனைவரையும் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. — குடும்பத்தினர்
(6687)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களில் அமுலில் இருந்து வந்த ஊரடங்குச் சட்டம் இன்று புதன்கிழமை காலை 6மணி முதல் நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டு தலைமையகம் அறிவித்தது.

### உலகில்

தின் பல நாடுகளில் இராணுவத் தீர்வுகள் பலனளிக்கவில்லை.

இனப்பிரச்சினை சம்பந்தமாக எழுதப்பட்ட ஒப்பந்தங்களை மறுதலிப்பதில் சிறிலங்கா அரசுகளின் வரலாறு திகில் நிறைந்ததாகக் காணப்படுகிறது

1977 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு பின் ஏற்பட்ட காலகட்டங்களில் ஒப்பந்தங்களின் புனிதத் தன்மையையும், நிலையான கட்டுக் கோப்புக்களையும் அரசாங்கங்கள் ஏற்றுக் கொள்ளுமா என்பதை நாம் அவர்களிடம் வினாவ வேண்டும்.

இன்று வடக்கு - கிழக்கில் பாரிய யுத்தம் ஒன்று இடம் பெற்று வருகிறது. விடுதலைப் புலிகள் கெரிலா யுத்தத்தில் கைதேர்ந்தவர்கள்.

கெரிலா யுத்தம் ஒன்றை நாம் வெல்ல வேண்டுமாகில் மக்களின் மனங்களை நாம் வெல்ல வேண்டும் என்று அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது

### அளவெட்டி

இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது

இதன்போது கப்டன் வெளளைத்தேவன் ( நியூட்டன் (செல்வநாயகம் சசிகரன் புன்னாலைக்கட்டுவன் வடக்கு) லெப்டினன்ட் கதிரவன் ( கிரிமாமா (சின்னையா சிவராசா புலோப்பளை மேற்கு பளை) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர். இவ் இரு போராளிகளுக்கும் விடுலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

...கட்டுக் கொண்டிருக்கின்றது பெண்மையும் வீரமே என்ற புதிய மரபினை உலகறியச் செய்து இந்த மண்ணினதும், சமூகத்தினதும் விடுதலைக்காக ஐந்நூறிற்கும் மேற்பட்ட பெண் மாவீரர்கள் இந்த மண்ணிலே வித்தாகியுள்ளனர். ஆண்களுக்குப் பெண்கள் எந்தவிதத்திலும் சளைத்தவர்களல்லர் என்பதை நிரூபணமாக்கி இவர்களது வரலாறு உலகை வியக்க வைத்திருக்கிறது. சமூகத்தில் பல உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலிருந்து ஒரு பாலரின் வளர்ச்சி ஏறத்தாழ ஒரு தசாப்தத்திற்குள்ளே வியக்கத்தகு வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்று தமிழீழம் தலை நிமிர்கிறது

முழுமையான வெற்றிக்கு ஆண், பெண் என்ற பேதமற்ற பலமான சக்தியே வழி

### யாழ்.

பி. ப. 1 30 வரை நடைபெறும்.

ஆண்டு9 மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில் நுட்பப் பாடம் மட்டும் க பொ. த. (சா. த.) பரீட்சைத் திகதிகளுக்கு முன்னர் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது ஆகவே ஆண்டு 9 மாணவர்களுக்கான கனிஷ்ட தொழில் நுட்பப் பாடம் மட்டும் நேரசூசி ஒழுங்குக்கு மாறுபட்டு டிசம்பர் 2ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 00 மணி முதல் பி. ப. 2 30 மணி வரை நடைபெறும் ஆண்டு 9 மாணவர்களுக்கான ஏனைய பாடங்கள் ஆண்டு 8, 10, மாணவர்களுடன் சேர்த்து டிசம்பர் 16-21 வரை நடைபெறும்.

ஆண்டு 4, 5 மாணவர்களுக்கான பரீட்சை டிசம்பர் 1, 2ஆம் திகதிகளில் (புதன், வியாழன்) நடைபெறும்.

இரண்டாம் கட்ட வினாத்தாள் விநியோகம் முன்னர் அறிவித்தவாறு 25 - 11 - 93 அன்று நடைபெறமாட்டாது

இரண்டாம் கட்ட வினாத்தாள் விநியோகம் 29-11-93 திங்கட்கிழமை மு. ப 9. 00 மணிக்கே நடைபெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

நினைவு கூருகிறோம். நவம்பர் 26ஆம் திகதி நள்ளிரவில் சுடர்விடும் தீபங்களில் பிரகாசித்தபடி பூத்திருக்கும் அவர்களின் முகங்களை, நினைவுகளை மனதிலிருத்தி எங்கள் குனிந்த தலைகளை மீண்டும் நிமிர்த்தி நிமிர்ந்து நிற்கிறோம். இந்த தேசம் நிமிர்வதற்காக பல்லாயிரம் வேங்கைகள் அணியில் செல்வோம் என்ற இறுதி இலட்சியத்துடன் எங்கள் பாதங்களை ஆழமாகப் பதித்துக்கொள்வோம் மாவீரர்களின் குருதிச்சுவடுகள்பற்றி உறுதிமிக்க எமது தேசத் தலைவனின் பின்னே உறுதியெடுத்துக் கொள்வோம். தமிழீழதேசம் தலைநிமிரும், அதுவே எமது தாகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஐ. தே. க

சொக்சி ஆகியோர் இ,தொ, க தலைவர்களுடன் மூன்று மணி நேரம் நடத்திய பேச்சு வார்த்தைகள் பலனளிக்கவில்லை என ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசாங்கம் தனியாரிடம் ஒப்படைத்த 450 தோட்டங்களின் ஒப்பந்த காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து அத்தோட்டங்களை 30 வருடங்கள் குத்தகைக்கு வழங்க வேண்டும் எனவும் குறைந்த வட்டியில் நீண்டகால கடன்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் அரசியல் தலையீடுகள் எதுவும் இருக்கக்கூடாது எனவும், அப்பகுதியில் இயங்கும் அரசியல் அமைப்புகள் கலைக்கப்பட வேண்டும் என்றும் தோட்டத்தொழிலாளர்களின் விடுமுறைகள் கணிசமான அளவு குறைக்கப்பட வேண்டும் எனவும் அக்கம்பனிகள் நிபந்தனைகள் விதித்துள்ளன,

இந் நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதை அடுத்தேஇ. தொ ,காவிற்கும் ஐ, தே, க விற்கும் இடையே முறுகல் நிலை தோன்றியுள்ளது,

பண்டைய காலத்து கற்காவியம்
இன்றைய ''சிறிநதியா''வின்
பொற்காவியம்...
...என்றென்றும் ரம்மியமான
கலைப்படைப்புகள்.
'சிறிநதியா'வின் நகைக்கூடத்தில் வண்ண, வண்ணமாக திகழ்கின்றன.

**"சிறிநதியா" நகை மாளிகை**

2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(6688)

உரும்பராய். (இ) செ. வசிகரன்

# மரண அறிவித்தல்கள்

## நாகலிங்கம் பூமணி

கொட்டடியைச் சேர்ந்தவரும், தற்போது நவாலியில் வசித்தவருமாகிய நாகலிங்கம் பூமணி (23-11 93) நேற்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு. சின்னையா நாகலிங்கத்தின்(நாகலிங்கம்அன்சண்) அன்பு மனைவியும், என் குணபாலன், ஜே கமலாவதி, கே. கலாவதி, காலஞ்சென்ற என். ஜெயபாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் கே. இன்பராணி, கே. ஜெயக்குமார், ரி. கார்த்திகேயன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24-11-93) கொத்துக்கட்டி மயானத்தில் இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நவாலி தெற்கு, மானிப்பாய். — கே. விஜயரூபன் (யா. ஹாட்லிக் கல்லூரி)
(6689)

## எட்வேட் வில்லியம் வேலுப்பிள்ளை துரைராஜா

மட்டக்களப்பு, திருக்கோவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட எட்வேட் வில்லியம் வேலுப்பிள்ளை துரைராஜா அவர்கள் (20-11-93) சனிக்கிழமையன்று டென்மார்க்கில் காலமானார் அன்னார் றோஸ் மனோன்மணியினது (டென்மார்க்) அருமைக்கணவரும் வைத்திய கலாநிதி T. W. ஜெயகுலராஜா (தனியார் வைத்தியசாலை, ஆனைப்பந்தி), மிருணாளினிதேவி (டென்மார்க்), பத்மினிதேவி(U.K), ஜெயானந்தராஜா (நைஜீரியா), வண. Sam. ஜெயதிலகராஜா (U. K), ஜெயகுமாரி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத்தந்தையும், ஞானதிலகராணி (ஆசிரியை யா/திருக்குடும்பக் கன்னியர்மடம், காலஞ்சென்ற D. K. பாக்கியம், சிறில் ரஞ்சித், பிரேமிளா, ஹில்டா (U K), தேவராஜா (டென்மார்க்) ஆகியோரின்மாமனாரும் ஜேகன் (மாணவன், யா/பரியோவான் கல்லூரி), தர்ஷினி, சுரேஷ் (டென்மார்க்), கிறிஸ்ரபெல் (U K), யோஎல், ஹரியற் (U.K), யாழினி, விநோத் (டென்மார்க்) ஆகியோரின் அருமைப்பேரனுமாவார். இவரது நல்லடக்கம் இன்று (24-11-93) நடைபெறும்வேளையில் அன்னாருக்கு அஞ்சலிசெலுத்தும் ஜெபக்கூட்டம் இல. 10, பழைய பூங்காவீதியில் உள்ளஇல்லத்தில் மாலை 4-30 மணிக்கு நடைபெறும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
வைத்திய கலாநிதி ஜெயகுலராஜா (மகன்)
10 பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
(6690)